Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு
தினப்பதிப்பு
THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/904)

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 20 செவ்வாய்க்கிழமை (06.09.2011) பக்கங்கள் 16 ஓசை – 342



புலம்பெயர்ந்த தமிழர்களால் தலையிடி

08



வியாபாரத்தில் புதிய உத்தி

11



06

குமாரசுவாமி 20-20 ஜொனியன்ஸ் வெற்றி



கேள்வி எழுப்பலாம்!

05

## இரத்த வங்கியில் புதிய தொழில்நுட்பம்

(கொழும்பு)

இரத்தவங்கிகளில் பத்து வருடங்கள் வரை இரத்தங்களைப் பாதுகாப்பாக வைததிருக்கக் கூடிய வகையிலான புதிய தொழில்நுட்பம் விரைவில் அறிமுகம் செய்யப்படவுள்ளன.

செங்குருதி கலங்களை 10 வருடங்கள் வரை பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான அதிநவீன தொழில் நுட்பமொன்றைப் பயன்படுத்துவது தொடர்பாக கவனம் செலுத்தப்படுவதாக தேசிய செங்குருதி வங்கி தெரிவிக்கிறது. தற்போதைய நடைமுறைக்கு அமைய செங்குருதி கலங்களை 42 நாட்களுக்கு மாத்திரமே களஞ்சியப்படுத்தி வைக்க முடியுமென வங்கியின் பணிப்பாளர் டொக்டர் ஆனந்த குணசேகர குறிப்பிடுகிறார். செங்குருதி கலங்களை பாதுகாப்பாக வைப்பதற்கான அதிநவீன தொழிநுட்ப முறைமை காரணமாக, அரியவகை குருதியைக் கொண்டுள்ளவர்கள் நன்மையடைவார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

# பீதியைத் தணிக்க அவசர மகாநாடு

## ஜனாதிபதி அதிரடி உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாவைப் பீடித்துள்ள மர்ம மனிதன் பீதிக்கு முடிவு கட்டுமாறு ஜனாதிபதி விடுத்த விசேட பணிப்புரைக்கமைய இன்று யாழ். செயலகத்தில் அவசர உயர் மட்ட மகாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.

யாழ். குடாநாட்டு மக்களிடையே அண்மைக் காலமாக நிலவிவருகின்ற பீதி மற்றும் பதற்றநிலை தொடர்பில் ஆராய்ந்து, அதற்குத் தீர்வுகாணும் வகையில் அவசர உயர்மட்ட மகாநாடொன்று இன்று காலை 9.30 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். குடாநாட்டில் அண்மைக்காலமாகத் தொடர்ந்து நிலவிவருகின்ற பதற்றம் மற்றும் குழப்பநிலை தொடர்பில் அமைசசர் டக்களஸ் தேவானந்தா மேனமை தாங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களுடன் கலந்துரையாடியுள்ளார். இதன் தொடர்ச்சியாக இன்று இவ் உயர்மட்ட மாநாடு நடைபெறுகின்றது. இம் மாநாட்டில் பெற்றோலியத் துறை அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி (15 ஆம் பக்கம் பார்க்க)

## பீதியை அகற்ற விழிப்புக் குழு அமைச்சர் டக்ளஸ் தலைவர்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் மர்ம மனிதன் பற்றிய பீதியைத் தணித்துப் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகப் பாதுகாப்பு விழிப்புக்குழுக்கள் அமைகப்படவுள்ளன.

மாவட்ட மட்டத்திலும், பிரதேச மட்டத்திலும், கிராமிய மட்டததிலும் இப்பாதுகாப்பு விழிப்புக் குழுக்கள் செயற்படவுள்ளன.


அனைத்து மட்டத்திலான மேறபடி குழுக்களையும் ஒருங்கிணைக்கும் மாவட்ட மட்டக்குழு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் செயற்படவிருக்கின்றது.

அமைச்சரின் தலைமையிலான இந்த மாவட்டத் தலைமைக்குழு குடாநாட்டில் அண்மைக்காலமாக நிலவிய பீதியையும் பதற்றத்தையும் தணிக்கும் வகையில் தேவையான அனைத்து வகையான நடவடிக்கைகளையும் முனனெடுக்கும். அதேவேளை பிரதேசமட்டக் குழுக்களையும், கிராமியமட்டக் குழுக்களையும் ஒருங்கிணைப்பதன் மூலம் குடாநாட்டுப் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் இக் குழு செயற்பட்டுவரும்.

நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற "உங்கள் பாதுகாப்பிற்கு நாம் எம்மை அர்ப்பணித்துள்ளோம்" எனும் தொனிபபொருளில் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக (15 ஆம் பக்கம் பார்க்க)

# அகன்றது அச்சம் பிறந்தது நம்பிக்கை

## அமைச்சரின் விஜயம் தந்தது தென்பு



(யாழ்ப்பாணம்)

அண்மைக்காலமாக மர்ம மனிதன் மற்றும் கிறிஸ் பூதத்தால பாதிக்கப்பட்ட நாவாந்துறைப் பிரதேசத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் நேற்று இரவு 7 மணியளவில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துவிச்சக்கர வண்டியில் சென்று அப்பிரதேச மக்களை சந்தித்தார்.

மேலும் அமைச்சரின் இந்த திடீர் விஜயத்தைக் கேள்விப்பட்டு அங்கு கூடிய மக்கள் அமைச்சரை வரவேற்றதோடு தமக்கு நேர்ந்த அவல நிலைமைகளை எடுத்துக் கூறினர். மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்த அமைச்சர் அங்கு வந்திருந்த உயர் அதிகாரிகளுக்கு மக்களின் பிரச்சினைகளை உடன் தீர்க்குமாறு கேட்டுக்கொண்டார். (15 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். விவசாயக் கண்காட்சி அலையென திரண்ட விவசாயிகள்

வடமாகாண விவசாயத்திணைக்களத்தின் 2011 ஆம் ஆண்டிற்கான விவசாயக் கண்காட்சி நேற்றுக்காலை 10.30 மணிக்கு திருநெல்வேலி விவசாயத்திணைக்களப் பயிற்சி நிலைய வளாகத்தில் ஆரம்பமானது. இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினர்களாகப் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்துகொண்டனர்.

பிரதம விருந்தினர்களான இவர்களைத் தமிழ் இன்னியம் இசைக் கலைஞர்களின் இசை முழக்கத்துடன் கண்காட்சி வளாகத்திற்கு அழைத்துவரப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றல் வைபவம் இடம் பெற்றதுடன், பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா நாடா வெட்டி கண்காட்சி வளாகத்தை திறந்துவைத்தார்.

இன்று முதல் 6 நாட்கள் நாள் நடைபெறும இக் கண்காட்சியில் விவசாயிகளின் விவசாயத்துறையில் பல மாற்றங்களைக் கண்டு (15 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தகளத்தில் மக்கள் படுகொலை; அமெரிக்க செய்மதி கண்காணித்தது

புலிகளுடனான இறுதிக்கட்ட யுத்த களக்காட்சிகளை இந்தியாவும், அமெரிக்காவும் செய்மதி தொழில்நுட்ப உதவியுடன் நேரடியாக அவதானித்துக கொண்டிருந்தன என்றும் அவ்வப்போது தேவையான இரகசியத் தகவல்களை இலங்கையுடனும் பரிமாறிக கொண்டிருந்தன என்றும் விக்கிலீக்ஸ் பரபரப்புத் தகவலை வெளியிட்டிருக்கிறது.

இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது பீரங்கி மற்றும் விமானத் தாக்குதல்களை நிறுத்திக் கொள்வதாக அரசாங்கம் அறிவித்ததன் பின்னரும், பாதுகாப்பு வலயத்தின் மீது நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களால் ஏற்பட்ட சேதங்களைக் காட்டும் சட்டலைட் படங்களை அமெரிக்க தூதரக அதிகாரிகள் அரசிடம் காண்பித்துள்ளதாக விக்கிலீக்ஸ் இணையத்தளம் தெரிவித்திருக்கின்றது.

• இலங்கை அரசாங்கம் (15 ஆம் பக்கம் பார்க்க)

# பீதிக்கு முற்றுப்புள்ளி அமைச்சரிடம் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ள மர்ம மனிதன் விவகாரத்திற்கு உடன் முற்றுப்புள்ளி வைக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் சபை உறுப்பினர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பிரதேச அபிவிருத்தியில் பங்கெடுக்கும் மக்கள்சபை உறுப்பினர்களுடனான சந்திப்பொன்று நேற்றுமாலை அமைச்சின் யாழ். அலுவலகத்தில் இடம்பெற்றபோதே மக்கள் இக் கோரிக்கையினை அமைச்சரிடம் முன்வைத்தனர்.

இதன்போது குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து வருகை தந்திருந்த மக்கள் சபைப் பிரதிநிதிகள் அண்மைக்காலமாக மர்ம மனிதர்களின் தொல்லை காரணமாக தாம் அனுபவித்த கஸ்டங்களை அமைச்சருக்கு எடுத்துக்கூறினர்.

அத்துடன், இவ்விவகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்காவிடின் அதைச் சிலர் அரசியலாக்க முற்படுவதாகச் சுட்டிக்காட்டினர். இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இது தொடர்பான உயர்மட்டக் கூட்டம் நாளை யாழ்.செயலகத்தில் இடம் பெறவுள்ளதாகவும், பாதிக்கப்பட்டவர்கள் தமது கருத்துக்களை வெளிப்படையாக முன்வைக்க முடியுமென்றும், இதன் மூலம் இடம்பெறும் விசாரணைகளுக்கு அது உதவியாக அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (26)

# மாதாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் 2011 ஆம் ஆண்டுக்கான எட்டாவது மாதாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

மாநகர முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகும் இந்நிகழ்விற்கு மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமை தாங்குகிறார். (எப்.எஸ்)

# உயிலங்கண்டி மயானத்துக்கு விமோசனம் கிடைப்பது எப்போது

(கரணவாய்)

கரணவாய் பிரதேசத்திலுள்ள உயிலங்கண்டி கிராய் மயானம் மற்றும் அங்குள்ள பொதுக் கிணறு என்பன நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாத நிலையில் இப்பிரதேச மக்கள் தாம் ஈமக் கிரியைகளை ஆற்றுவதில் பெரும் இடர்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

சுமார் 50 வருடங்களாக புனரமைப்புச் செய்யப்படாத நிலையிலுள்ள இம்மயானத்தை கரணவாய், கரணவாய் தெற்கு, கரணவாய் கிழக்கு ஆகிய 3 கிராம மக்கள் ஈமக்கிரியைகளுக்காகப் பயன்படுத்தி வருகின்றனர்.

தற்போது இம்மயானம் சேதமடைந்த நிலையில் காணப்படுவதுடன் பொதுக்கிணறின் மேல் மூடி இடிந்து விழும் அபாய நிலையும் காணப்படுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இம்மயானத்தின் புனரமைப்பு தொடர்பாக கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேசசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இப் பிரதேச பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (18)

# செல்வபுரம் மக்களுக்கு வீடுகள் கையளிப்பு




(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப் பற்று உதவி அரசாங்கப் பிரிவுக்குட்பட்ட செல்வபுரம் கிராம சேவையாளர் பிரிவில் போரினால் வீடுகளை இழந்த மக்களுக்காக கரித்தாஸ்-கியூடெக் - வன்னி நிறுவனத்தினால் நிர்மாணிக்கப் பட்ட 95 புதிய வீடுகளைப் பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு நாளை காலை 10.00 மணியளவில் புனித யுதாததேயு ஆலய முன்றலில் இடம்பெறும்.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவும், சிறப்பு விருந்தினர்களாக அதிவணக்கத்துக்குரிய யோசவ் ஸ்பின்ரறி (கருதினார்), நோர்வே தூதுவர் திருமதி கில்டே கரால்டேற்றா, யாழ்.அதிவணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, அதிவணக்கத்துக்குரிய கரல்ட் அன்ரனி பெரேரா ஆகியோரும் கலந்து சிறப்பிப்பர்.

மேலும் விசேட விருந்தினர்களாக ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, எஸ்.பி.தேவரட்ணம் (சேலர் பி.ரி.எப்), அருட்திரு ஜோர்ச் சிகாமணி (தேசிய இயக்குநர் கரித்தாஸ், இலங்கை), அருட்திரு வேனாட் றெக்னோ (இயக்குநர் கரித்தாஸ் கியூடெக் யாழ்ப்பாணம்), முல்லைத்தீவு அரச அதிபர் ஏ.பத்திநாதர் ஆகியோரும் பங்குபற்றவுள்ளனர்.

யுத்தத்தின் பின்னரான ஒரு வருட காலத்தில் இவர்களுக்கான வாழ்வாதார உதவித்திட்டத்தில் மீன்பிடி வள்ளம் உட்பட கடல் உபகரணங்கள் இம் மக்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



விரிவுரையாளர் ச.லலீசன் அவர்களுக்கு "சிவத்தமிழ்ச் சொல்லழகர்"என்னும் சிறப்புப் பட்டம் ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டப விழாக் குழுவினாரால் வழங்கிக் கௌரவிக்கப்படுவதைக் காணலாம்.


## இலங்கை மின்சார சபை
## யாழ் பிரதேச அலுவலகம்
## மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர்அழுத்த மின்விநியோக மார்க்கங்களிலுள்ள மின் கம்பங்களை இடமாற்றவேண்டியிருப்பதால் குறிப்பிட்ட தினங்களில் காலை 8.30 மணி முத்தல் மாலை 5.00 மணிவரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின் பாவனையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

| திகதி | இடங்கள் |
|---|---|
| 06.09.2011 செவ்வாய்க்கிழமை | கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், உரும்பிராய், ஊரெழு பிரதேசத்தின் ஒரு பகுதி. |
| 07.09.2011 புதன்கிழமை | இணுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கொட்டடி, கோம்பயன் மணல் பிரதேசம், யாழ். பட்டணப்பகுதி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம். |
| 08.09.2011 வியாழக்கிழமை | உரும்பிராய், ஊரெழு பிரதேசத்தின் ஒரு பகுதி. |
| 09.09.2011 வெள்ளிக்கிழமை | இணுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கொட்டடி, கோம்பயன் மணல் பிரதேசம், யாழ். பட்டணப்பகுதி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம். |
| 10.09.2011 சனிக்கிழமை | உரும்பிராய், ஊரெழு பிரதேசத்தின் ஒரு பகுதி. |
| 11.09.2011 ஞாயிற்றுக்கிழமை | இணுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கொட்டடி, கோம்பயன் மணல் பிரதேசம், யாழ். பட்டணப்பகுதி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம். |

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகிறோம்.

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும் இலங்கை மின்சாரசபை" (C/568)


# இளைஞர் குழு கைது

(யாழ்ப்பாணம்)

கசூரினா கடற்கரைக்குச் சென்ற இளைஞர்கள் ஒன்பது பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 6.00 மணியளவில் கசூரினா கடற்கரைக்குச் சென்று விட்டுத் திரும்பி வரும்பொழுது குறித்த இளைஞர்கள் துடுப்பாட்ட உபகரணங்களுடன் வந்தபோது யாழ். பொலிஸாரினால் நேற்றுக் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். (எஸ்)

# வயோதிபர் மீது தாக்குதல்

(இருபாலை)

நல்லூர் ஆலயச் சூழலில் இருந்த வயோதிபரை இனந்தெரியாத நபர்கள் அழைத்துச் சென்று தாக்கிவிட்டு நகைகளை அபகரித்ததுடன், செம்மணிச் சுடலை அருகில் போட்டு விட்டுச் சென்ற சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தில் குறித்த வயோதிபர் நேற்று 12.30 மணியளவில் செம்மணி சுடலை அருகில் சுயநினைவிழந்த நிலையில் உறவினர்களால் மீட்கப்பட்டுள்ளார்.

இருபாலை, பழம் வீதியைச் சேர்ந்த இராமு நடராசா (வயது-67) என்ற மேற்படி வயோதிபர் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். (எஸ்)


## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### வெளிவாரிப் பரீட்சைகள் - 2010

1. வணிக முதற் தேர்வு - 2010 (புதிய/பழைய பாடத்திட்டம்) (வெளிவாரி)
2. வணிக இரண்டாம் தேர்வு - 2010 (புதிய பாடத்திட்டம்) (வெளிவாரி)

### மீள் பரீட்சார்த்திகளுக்கான அறிவித்தல்

வணிக முதற்தேர்வு (புதிய / பழைய பாடத்திட்டம்) - 2009 மற்றும் வணிக இரண்டாம் தேர்வு (புதிய பாடத்திட்டம்) - 2009 பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இப்பரீட்சையில் சித்தியடையத் தவறிய பரீட்சார்த்திகளிடமிருந்து மீள்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 23.09.2011 (வெள்ளிக்கிழமை) வரை ஏற்றுக் கொள்ளப்படும். ஒவ்வொரு பாட அலகிற்கும் மீள்பரீட்சார்த்திகள் செலுத்த வேண்டிய பரீட்சைக் கட்டணம் ரூபா.200/= ஆகும். யாழ்.பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா.100/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப் படிவத்தினைப் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா.100/=க்கான காசுக் கட்டளை / தபாற் கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட ரூபா.40/=பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28X20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன், உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 021-2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்.
05.09.2011. (C/923)

உலகில் மூன்று வகையான மக்கள் இருக்கின்றனர். செய்ய முடியும் என்பவர் செய்ய மாட்டோம் என்பவர்,செய்ய இயலாது என்பவர். முதலாமவர் எல்லாவற்றையும் செய்து முடிக்கின்றனர். இரண்டாமவர் எதிர்க்கின்றனர்,மூன்றாமவர் எவற்றிலும் தோல்வியடைகின்றர். --அனுபவசாலி-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## நன்றே நம்பி குடிவாழ்க்கை!

உலகம் முழுவதிலும் உள்ள தகுதியும் திறமையும் வாய்ந்த தேர்ச்சி பெற்ற 700 ஆயிரம் விஞ்ஞானிகளுக்குள், 520 ஆயிரம் பேர் நமது வாழ்க்கையை சீர்குலைக்கும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்களாம். அவர்களுள் வெறும் 180 ஆயிரம் பேர் மட்டுமே மானுட மேன்மையைப் பற்றிய ஆக்கபூர்வமான ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளதாக ஒரு புள்ளிவிபரம் கூறுகிறது. விஞ்ஞானிகள் மட்டும் என்றில்லை, சாதாரண பொதுமக்களிலும் தெரிந்தோ தெரியாமலோ நிலைமைகளை சீர்குலைக்க உதவிக் கொண்டிருப்பவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள் என்று தோன்றுகிறது.

இல்லையெனில் நம் கஷ்டங்கள் ஏன் முடிவே இல்லாமல் தொடர வேண்டும்? நமக்கு வேண்டியதைத் தீர்மானித்து அதனைச் சாத்தியப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எண்ணாமல், சாத்தியமில்லாத விருப்பக் கனவுகளிலேயே விடாப்பிடியாக நின்று வாழ்வைச் சீர்குலைக்க நாண்டு கொண்டிருப்பதை வேறு எப்படி விளங்கிக் கொள்வது?

நமது லட்சியங்கள், உள்ளாசைகளுக்காக பெரும்பாலோரைப் பலியிட்டுக் கொள்வதாக நம் பிடிவாதங்கள் தொடரக் கூடாது. நாம் மிகச் சரியானது இதுவே என்று கருதிச் செய்யும் சில செயல்கள் மற்றவர்கள் பலபேரைத் தண்டிப்பதாக அமைந்துவிடும் சாத்தியங்களை நாம் உணர வேண்டும். போத்துக்கல் எழுத்தாளர் யொஸே ஸரமாகோ நாவலில், லாசரஸ் மரணமடைந்து கிடக்கும்போது இயேசு அவனை உயிர்ப்பிக்க முயல்கிறார். அப்போது மரியா மக்தலேனா தடுத்து நிறுத்தி, போதும் அவனை உயிர்ப்பித்து இரண்டுமுறை சாகச் செய்யாதீர்கள் என்கிறாள். மக்களுக்கு உணர்ச்சியூட்டி, பகையை உயிர்ப்பித்து, இன்னுமொரு தடவை போரிட்டு அழிவதே நமக்கிருக்கும் ஒரே மார்க்கம் என்று காட்ட முனைபவர்கள் இதை யோசிக்க வேண்டும்.

கிரேக்க துன்பியல் நாடகங்களில், நன்மையோ தீமையோ தேர்ந்தெடுக்கும் உரிமையைக் கதாநாயகனுக்குத் தெய்வங்கள் கொடுத்திருக்கும். அதேசமயத்தில் அவன் எப்பொழுது தீமையைத் தேர்ந்தெடுப்பான், அவனை அழித்துவிடலாம் என்று அவை காத்துக் கொண்டிருக்கும். அதுபோலவே நம்மையும் இயற்கை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதாகவே தெரிகிறது. தேர்ந்தெடுப்பில் நாம்தான் விவேகத்தைக் காண்பித்துக்கொள்ள வேண்டும். பிழையான தேர்வுகள் பெரும் பீழைகளையே தரும் என்பதை இப்போது எவரையும்விட நன்கறிந்து கொண்டவர்கள் நாம். தொடர்ந்தும் அதையே செய்யக் கூடாது.

அவநம்பிக்கைகளையே வெளியிட்டபடி எதிர்ப்புகளில் நாம் சிதைந்து கொண்டிராமல் அதிலிருந்து வெளிவர வேண்டும். தொடர்ந்து ஏமாற்றமடைந்து கொண்டிருந்தாலும் கூட, இழப்புகளற்ற, அவதிகளும் சாவுகளும் அற்ற இயல்பான ஒரு வாழ்வுக்காக நம்பிக்கையோடு மறுபடி மறுபடி அனுகுவதில் பெரிய பாதகங்கள் இருக்காது. அவநம்பிக்கையோடு விலகிச் செல்லச் செல்ல அழிவுகளின் புதைசேற்றுக்குள்ளேயே நாம் மூழ்கிக் கொண்டிருக்கும் நிதர்சனத்தை விட அது மேலானது. சமூகத்தை மோசமான விபத்துகளுக்குத் தள்ளிவிடாமலிருக்கும் பொறுப்புணர்வையும் அது காண்பிக்கும். நலம் பயக்கும் வழியை நாம் தேர்ந்துகொள்ள வேண்டும்.

"ஒன்றே என்னின் ஒன்றே ஆம்
பல என்று உரைக்கின் பலவே ஆம்
அன்றே என்னின் அன்றே ஆம்
ஆமே என்னின் ஆமே ஆம்
இன்றே என்னின் இன்றே ஆம்
உளது என்று உரைக்கின் உளதே ஆம்
நன்றே நம்பி குடிவாழ்க்கை
நமக்கு இங்கு என்னோ பிழைப்பு அம்மா!"

அந்த கம்பனின் பாடல் சொல்வதும் இதைத்தான். ஒன்று என்றால் ஒன்றுதான். பல என்றால் பல. அல்ல என்றால் அல்ல. ஆம் என்றால் ஆம். இல்லை என்றால் இல்லை. உண்டு என்றால் உண்டு. இவற்றில் எது நலம் பயக்குமோ அதை நம்பி நம் வாழ்க்கை செல்கிறது. இதை விட வேறென்ன வழி நமக்கு?

- ஆசிரியர்

# சுயாதீன விசாரணைகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தும்

## சண்டே லீடர் பத்திரிகை தகவல்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் எதிர்வரும் கூட்டத் தொடரில் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என இலங்கை அரசாங்கத்தை ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தும் சாத்தியங்கள் தென்படுவதாக கொழும்பில் இருந்து வெளிவரும் சண்டே லீடர் பத்திரிகை தெரிவித்துள்ளது.

அத்துடன், ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவினால் வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பில் செயலாளர் நாயகம் பான் கீ மூனுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் மூத்த அதிகாரியான லுலியா கோஸ்டா இவ்வூடகத்திற்கு கூறியுள்ளார்.

இப்போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான நம்பத்தகுந்த விசாரணைகள் மேற்கொள்வதன் ஊடாகவே இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் எனவும் அவர் இவ்வூடகத்திற்கு நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவினால் வெளியிடப்பட்ட அறிக்கையின் பரிந்துரைகளுக்கு அமைய அரசாங்கம் இப்போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் இலங்கை விவகாரம் குறித்து விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படாது எனத் தெரிய வருகின்ற போதிலும்,சில நாடுகள் இலங்கை விவகாரம் குறித்து கேள்வி எழுப்ப தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் குறித்து சர்வதேச நியமங்களுக்கு ஏற்றவகையில் சுயாதீனமான நம்பத்தகுந்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வியாபார கற்கைகள் பீடத்திற்கு ஐந்து மில்லியன் நிதி வழங்கல்

(வவுனியா)

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் வியாபாரக் கற்கைகள் பீடத்திற்கு மேலதிக வசதிகளை ஏற்படுத்த பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஐந்து மில்லியன் ரூபாயினை வழங்கியுள்ளதாக வளாக முதல்வர் பேராசிரியர் என்.நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பம்பைமடு வளாகத்திற்கு 168ஏக்கர் காணி ஒதுக்கீடு செய்யப்பட்டு முதல் கட்டமாக ஒரு பீடத்தின் விரிவுரைகள் மட்டுமே நடைபெறுகிறது இதில் சுமார் 300 மாணவர்கள் கற்கை நெறியில் இணைந்துள்ளனர் என குறிப்பிடும் வளாக முதல்வர் தற்போது நடைபெற்றுவரும்

வியாபாரக் கற்கைகள் பீடம் அமைந்துள்ள பம்பைமடுவிற்கு வளாகத்திற்கு அருகாமையில் நகர கழிவுகள் கொட்டப்படும் குழி அமைந்துள்ளதினால் வளாகத்தில் இலையான் பெருக்கம் குறித்து வளாக முதல்வர் பேராசிரியர் என் நந்தகுமார் நகரசபை நிர்வாகத்தினருக்கும் பொதுச்சுகாதார பரிசோதகருக்கும் அவசர கடிதங்களை அனுப்பிவைத்துள்ளார்.

# நல்லிணக்க ஆணைக்குழுவின் குறைபாடுகள் அம்பலப்படுத்துவதற்குத் தயாராம்

## கூறுகிறது சர்வதேச மன்னிப்புச்சபை

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் குறைபாடுகளை அம்பலப்படுத்தப்போவதாக சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அடிப்படை முரண்பாடுகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கிய அறிக்கை ஒன்று விரைவில் வெளியிடப்படும் என்றும் சர்வதேச மன்னிப்புச்சபை அறிவித்துள்ளது.

நல்லிணக்க ஆணைக் குழுவின் குறைபாடுகள், எப்போது இவர்களுக்கு நியாயம் கிட்டும் என்ற தலைப்பில் மன்னிப்புச்சபையின் அறிக்கை வெளியிடப்படவுள்ளது.

அதேவேளை, நல்லிணக்க ஆணைக்குழுவிடம் சாட்சியங்களை முன்வைக்குமாறு சர்வதேச மன்னிப்புச்சபை,மனித உரிமை கண்காணிப்பகம் மற்றும் சர்வதேச அனர்த்தக்குழு ஆகியவற்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த அழைப்பை மூன்று அமைப்புகளும் நிராகரித்தமை குறிப்பிடத்தக்கது.

# கூட்டுறவாளர்களுக்கான பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

உலக உணவுத்திட்ட அனுசரணையுடன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொதுமுகாமையாளர்கள் மற்றும் கணக்காளர்களுக்கான பயிற்சி வகுப்பு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் இப்பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைத்தார்.

யாழ்.ப.நோ.கூ.சங்க கேட்போர் கூடத்தில் ஆரம்பமாகிய இந்த இரண்டு நாள் பயிற்சி வகுப்பில் சங்கங்களின் அபிவிருத்தி மற்றும் செயற்பாடுகள் குறித்த விரிவுரைகள் இடம்பெறும்.

யாழ்.செயலக திட்டப் பணிப்பாளர் மற்றும் கூட்டுறவு அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டு விரிவுரையாற்றினர்.

(வி)

# காணி அமைச்சர் யாழ்.விஜயம்

காணி அபிவிருத்தி அமைச்சர் ஜானக பண்டார தென்னகோன் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இன்று யாழ்ப்பாணத்திற்கு வருகைதரவுள்ளார். இன்று காலை காரைநகர் பிரதேசத்திற்கு விஜயம் செய்யவுள்ள அமைச்சர் அங்குள்ள மக்களின் காணி தொடர்பான பிரச்சினைகள் குறித்து ஆராயவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சிக்கச் சேரிக்கு விஜயம் செய்து அங்கு காணி தொடர்பான பல்வேறு திட்டங்கள் தொடர்பாகவும், அதனூடாக மக்களுக்கு வழங்கப்பட்ட காணிகளுக்கான உறுதிவழங்கும் நிகழ்விலும் கலந்து கொள்ளவுள்ளதுடன் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் மற்றும் அதிகாரிகளுடனான காணி தொடர்பான கலந்துரையாடலையும் மேற்கொள்ளவுள்ளார். (29)

# சனசவங்கி 82.5 மில்லியன் ரூபா சுயதொழில் முயற்சிக்கடன் வழங்கியுள்ளது

(யாழ்ப்பாணம்)

சனச அபிவிருத்தி வங்கியினால் யாழ்.மாவட்டத்தில் சுயதொழில் மற்றும் வாழ்வாதார கடன் திட்டத்தின் கீழ் 82.5 மில்லியன் ரூபா கடன் வழங்கப்பட்டிருப்பதாக அவ் வங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தகவல் தருகையில், இக் கடன் திட்டம் ஒவ்வொரு கிராமங்களிலும் வங்கியினால் உருவாக்கப்பட்ட குழுக்களின் ஊடாகவே வழங்கப்படுகிறது.

இதற்கென யாழ்ப்பாணம் தலைமைப்பணிமனை உட்பட பருத்தித்துறை,சுன்னாகம்,பளை போன்ற பகுதிகளில் அமைக்கப்பட்டிருக்கும் உப பணிமனைகளின் கீழ் 530குழுக்கள் அமைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

2650 குடும்பங்கள் நேரடியாகத் தொடர்புபட்டிருப்பதாகவும் தெரிவித்த அவ் அதிகாரி யாழ்.மாவட்டத்தில் 2010 ஜனவரி 19ஆம் திகதியில் இருந்து இதுவரை 1650 பயனாளிகளுக்கு சுயதொழில் மற்றும் வாழ்வாதார கடன்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

## மர்ம மனிதன் போர்வையில் தோட்டங்களில் திருட்டு

(அச்சுவேலி)

வலிகாமம் கிழக்குப் பகுதியில் உள்ள விவசாய விளை நிலங்களில் மர்ம மனிதன் என்ற போர்வையில் திருட்டுச் சம்பவங்கள் அண்மை நாட்களில் அதிகரித்திருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

வலிகாமம் கிழக்கின் அச்சுவேலி, ஆவரங்கால், நிலாவரை, நீர்வேலி போன்ற பகுதிகளில் உள்ள விளை நிலங்களிலிருந்து இரவு வேளைகளில் காய்கறிகள், கிழங்கு வகைகள் உள்ளிட்ட மரக்கறிப் பயிர்கள் திருடப்பட்டு வருவதுடன் வாழைக் குலைகளும் களவாடப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மர்ம மனிதனின் பீதியால் இரவு வேளையில் மக்கள் வீடுகளில் முடங்கிக் கிடக்கின்றனர். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி திருடர்கள் தம் சைவரியையைக் காட்டி வருகின்றனர். இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (03)

## கிளிநொச்சிப் பகுதியில் இயங்கி வரும் ஒரேயொரு எரிபொருள் நிரப்பு நிலையம்

### நீண்ட நேரம் காத்திருக்கும் அவலம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரத்தில் ஒரேயொரு எரிபொருள் நிரப்பு நிலையமே உள்ளதால் இப்பிரதேச மக்கள் நீண்டநேரம் காத்திருந்து சிரமங்களுக்கு மத்தியில் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த யுத்த காலத்திற்கு முன்னர் இங்கு மூன்று எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இருந்த போதிலும் தற்போது ஒரு நிலையமே கரடிப்போக்குச் சந்தியில் அமைந்துள்ளது.

இதேவேளை, இவ் எரிபொருள் நிலையம் ஏ-9 வீதிக்கு அருகாமையில் உள்ளதால் அவ்வீதியூடாக பயணம் செய்யும் மக்களும் இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நின்றே எரிபொருளைப் பெறுகின்றனர்.

அதிகளவிலான மக்கள் இந்நிலையத்தினையே பயன்படுத்துவதால் சிலவேளைகள் நீண்ட வரிசையில் காத்திருந்தே பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இந்த நெருக்கடியான சூழலைத் தடுப்பதற்கு இயங்காதுள்ள இரு எரிபொருள் நிரப்பு நிலையங்களை பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் செயற்படுத்தினால் இப்பிரதேச மக்கள் இலகுவாக எரிபொருளைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (கே)


# யாழ். மாவட்டத்தில் 221 சிறுவர்கள் மனநிலையால் பாதிக்கப்பட்டுள்ளனர்

### மாவட்ட செயலகப் புள்ளி விபரத் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் யூன் மாதம் வரையான ஆறு மாத காலப்பகுதியில் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் 221 சிறுவர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட செயலக புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி யாழ். மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலக பிரிவுகளிலும் மனநிலையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை தொடர்பான விபரம் வருமாறு:



நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் 4 சிறுவர்களும், வேலணை பிரதேச செயலர் பிரிவில் 10 சிறுவர்களும், ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் 8 சிறுவர்களும், காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 14 சிறுவர்களும், யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவில் 16 சிறுவர்களும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 10 சிறுவர்களும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 11 சிறுவர்களும், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 13 சிறுவர்களும், உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 10 சிறுவர்களும், தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவில் 11 சிறுவர்களும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 39 சிறுவர்களும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 31 சிறுவர்களும், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 29 சிறுவர்களும், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 14 சிறுவர்களும், மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் ஒரு சிறுவனும் இனங்காணப்பட்டுள்ளனர்.

### சுற்றுலா மையமாகும் கரடிப்போக்கு சந்தி

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தி தற்போது சுற்றுலா மையமாக மாறி வருகின்றது. தென்னிலங்கையிலி[illegible]து வரும் பெருமளவான மக்[illegible] இச்சந்திப் பகுதியில் தங்கி இளைப்பாறிய பின்னரே யாழ்ப்பாணத்திற்கான தமது பயணத்தை மேற்கொள்வதை அவதானிக்க முடிகிறது. (121)

### மக்கள் வங்கியினால் 50 வீடுகள் நிர்மாணம்

மக்கள் வங்கியினால் மன்னார் மடுச் சந்திப் பகுதியில் 50 வீடுகள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. மக்கள் வங்கியின் 50ஆவது ஆண்டு பொன்விழாவை முன்னிட்டு இங்கு மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் வீட்டு வசதிகளை முன்னெடுக்கும் முகமாக இந்த 50 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (121)

### மணியம்தோட்டம் கிராமத்திற்கு விரைவில் மின்சார விநியோகம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மணியம்தோட்டத்திற்கு விரைவில் மின்சாரம் விநியோகிக்கப்படவுள்ளது. இதற்கான முன்னேற்பாடாக மின்கம்பங்கள் துரித கதியில் நாட்டப்பட்டு வருகின்றன. துறைமுக வீதியூடாக மணியம்தோட்டம் சந்தி வரைக்கும் தற்போது இந்த மின்கம்பங்கள் நாட்டப்பட்டுள்ளது. எதிர்வரும் மாரி காலத்திற்கு முன்பாக மின்விநியோகத்தை இப்பகுதிக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மின்சார சபையினர் தெரிவித்துள்ளனர். (வி)

### ஆங்கில கணினி பயிற்சி நெறிக்கு விண்ணப்ப முடிவுத் திகதி நீடிப்பு

(வவுனியா)

வவுனியா தொழில்நுட்பக் கல்லூரியின் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் இளைஞர் விவகார அலுவல்கள் திறன் அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையுடன் தொழில்நுட்பக் கல்லூரி பயிற்சித் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆறு மாத ஆங்கில கணினிப் பயிற்சி நெறிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

இதில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியலாளர், ஆங்கிலச் சான்றிதழ் தொடர்பாடலும் ஆகிய கற்றை நெறிகளே மேற்கொள்ளப்படவுள்ளது. தற்போது க.பொ.த. (உ/த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் நன்மை கருதி இப்பயிற்சி நெறிக்கான முடிவுத் திகதி எதிர்வரும் 10ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேலதிக தகவல் தேவைப்படுமாயின் 024 222 3664 என்ற காரியாலய தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனக் கல்லூரி அதிபர் வை. சத்தியநாதன் அறிவித்துள்ளார்.





கிளிநொச்சியில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலக மக்கள் இணைப்பு அலுவலகத்தின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மருத்துவ முகாம் நிகழ்வில் இந்தியாவிலிருந்து வருகை தந்த மருத்துவர்களும், இலங்கை மருத்துவர்களும் மக்களுக்கு மருத்துவ சேவைகளை வழங்குவதைக் காணலாம். (77)

### கால் நடைகளுக்கு புல் வளர்க்க தீவுப் பகுதியில் நடவடிக்கை

(யாழ். நிருபர்)

தீவுப் பகுதியில் உள்ள தரவை நிலங்களை உழுது பண்படுத்தி கால்நடைகளுக்குத் தேவையான புல்லினங்களை வளர்ப்பதற்கு நடவடிககைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. கடந்த வாரம் நடைபெற்ற வேலணை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வேலணைப் பிரதேசத்தில் மேயும் பசுக்களுக்கான புல்லினங்கள் அருகி வருவதாகவும், வேலணை, அராலிப் பகுதியில் வீதி திருத்தம் போன்ற தேவைகளுக்கு மணல் அகழ்ந்தெடுக்கப்பட்டு வருவதால் அப்பகுதி மேடுபள்ளம் நிறைந்து காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. (10)

## மாந்தையில் 10 கிராமங்களுக்கு இந்து சேவா சங்கம் உதவி

(யாழ். நிருபர்)

மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பத்து கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கான வாழ்வாதார உதவிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இந்து சேவா சங்கத்தின் இணைப்பாளரும், மாந்தை மேற்கு பிரதேச சபையின் உறுப்பினருமான மகாலிங்கம் நடேசன் தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்ட கிராம மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு அங்கவீனமானோருக்கும், விதவைகளுக்கும் விசேடமான முறையில் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பாடசாலை மாணவர்களுக்கான துவிச்சக்கரவண்டிகள், கோழி வளர்ப்பு, பசு மாடு வளர்ப்பு, விவசாய உபகரணம் வழங்குதல் போன்ற உதவிகள் வழங்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்து சேவா சங்கத்தின் இந்த உதவித் திட்டங்களின் மூலம் தாம் பெரிதும் நன்மையடைந்திருப்பதாக அப்பகுதி மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

## நடைமுறைக்கணக்கு வைத்திருப்போருக்கு மக்கள் வங்கியின் விசேட பரிசுப் போட்டி

மக்கள் வங்கி தனது 50ஆவது ஆண்டு பொன்விழாவை முன்னிட்டு நாடுபூராகவுமுள்ள வங்கிக் கிளைகளூடாக விசேட போட்டியொன்றை நடத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளதாக மக்கள் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் செ. பத்மநாதன் தெரிவித்தார்.

இப்போட்டி தொடர்பாக அவர் மேலும் தகவல் தருகையில், தனிநபர் மற்றும் கூட்டு நடைமுறைக் கணக்கைப் பேணிவரும் வர்த்தக சமூகத்தினரையும், தொழில் பிரமுகர்களையும் இலக்காகக் கொண்டே இப்போட்டி நடத்தப்படுகின்றது.

பொன்விழாவை முன்னிட்டு 2011ஆம் ஆண்டில் மக்கள் வங்கியில் நடைமுறைக் கணக்கைப் பேணிவரும் வாடிக்கையாளர்களுக்குத் தனித்துவமான விசேட பரிசில் போட்டி ஒன்று நாடளாவிய ரீதியில் மக்கள் வங்கியின் அதன் சகல கிளை வலைப்பின்னலூடாக நடைமுறைப்படுத்த முன்வந் துள்ளது. ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் நடைபெறும் இவ்விசேட போட்டிக்கு 50 ஆயிரம் ரூபா அல்லது அதற்கு மேலான கணக்கு மீதியைக் காலாண்டின் ஆரம்பம் தொடக்கம் இறுதி வரை தொடர்ச்சியாகப் பேணி வரவேண்டும்.

இந்நடைமுறைக் கணக்கில் ஐந்து இலட்சம் ரூபா வரையிலான மீதியை காலாண்டுக் காலப் பகுதியில் பேணி வந்திருப்பின் ஒவ்வொரு 50 ஆயிரம் ரூபாவிற்கும் 10 பரிசு வெல்லும் சந்தர்ப்பங்களும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும்.

இவ்விசேட சீட்டிழுப்பின் மூலம் ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒவ்வொரு வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு விசேட பரிசாக சுசுகி அல்டோ வகை புத்தம் புதிய மோட்டார் கார் பரிசாக வழங்கப்படும். இப்போட்டி நடைமுறைக் கணக்கை மேலும் வாடிக்கையாளர்களுக்கு 2011ஆம் ஆண்டின் நான்கு காலாண்டுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு 2011ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதியன்று முடிவடையும் எனத் தெரிவித்தார். (எஸ்)

# கேள்வி எழுப்புவதற்கான உரிமை ஊடகங்களுக்கு இருக்கின்றது

## யாழில் ஊடக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல

(யாழ்ப்பாணம்)

வாதிடுவதற்கும் கேள்வி எழுப்புவதற்குமான உரிமை ஊடகங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் உள்ளது என தெரிவித்துள்ள வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, தனிப்பட்ட நபரையோ. அரசையோ அல்லது ஒரு குறிப்பிட்ட தரப்பினரையோ கொச்சைப்படுத்தும் உரிமை ஊடகங்களுக்கோ, ஊடகவியலாளர்களுக்கோ இல்லை என்று தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். நகரில் உள்ள ரில்கோ விடுதியில் இடம்பெற்ற ஊடகவியலார்களுக்கான செயலமர்வு ஒன்றில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இக்கருத்தைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர்,

நாடு யுத்தத்திற்குப் பின்னர் அபிவிருத்திப் பாதையில் செல்கின்ற இந்தச் சூழ்நிலையில் ஊடகவியலாளர்களின் பங்கு அபிவிருத்திக்கும், நாட்டின் முன்னேற்றத்துக்கும் அவசியமான ஒன்றாக உள்ளது.

சர்வதேச ரீதியில் இலங்கை எதிர்கொள்ளும் சவால்களுக்கு முகம் கொடுத்து நாட்டினை சிறந்த ஒரு பாதையில் வழிநடத்தும் பொறுப்பு ஊடகங்களுக்கு உள்ளது.

ஊடகவியலாளர்கள் வெவ்வேறு விதமான சித்தாந்தத்தினை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டாலும் அவர்களை நாட்டின் அபிவிருத்திக்காகவும், தேசிய ஒற்றுமைக்காகவும் ஒன்றிணைப்பதே அரசினதும், ஜனாதிபதியினதும் நோக்கம் என்றார்.

இச்செயலமர்வில் ஊடக அமைச்சின் செயலாளர் டபிள்யூ.பி.கனேகல, ரூபவாகினி கூட்டுத்தாபனத் தலைவர் மொகான் சமரநாயக்க உட்பட மற்றும் மக்கள் தொடர்பாடல் தகவல் அமைச்சின் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.


செயலமர்வு முடிவில் ஊடகவியலாளர்களுக்கு ஒலிப்பதிவுக் கருவிகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

## விவசாய கலாசார நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் விவசாயக் கலாசார நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ் மாவட்ட விவசாயப் பயிறசி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.



நேற்றுக் காலை ஆனைப்பந்தி சந்திப் பகுதியில் ஹையேஸ் வானொன்றும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளாகியது. விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிளையும் ஹையேஸ் வாகனத்தையும் காணலாம். (படம்:சுதர்சன்)

## க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு 60 வீத மாணவர்களே தோற்றினர்

(வலிகாமம்)

நடந்து முடிந்துள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு யாழ். குடாநாட்டிலிருந்து விண்ணப்பித்திருந்த மொத்த மாணவர் தொகையில், 60% மான மாணவர்களே பரீட்சைக்குத் தோற்றியுள்ளதாகப் பிராந்திய பரீட்சை இணைப்பு நிலையப் புள்ளி விபரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

கடந்த வருடத்துடன் இதனை ஒப்பிடும்போது, இவ்வருடம் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றியுள்ள வீதம் குறைந்து காணப்படுகிறது.

பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்த பல பரீட்சார்த்திகள் பல்வேறு காரணங்களின் நிமித்தம் பரீட்சைக்குத் தோற்ற முடியாமல் இருந்துள்ளதனால் இத்தகைய வீழ்ச்சி ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

இந்நிலை குடாநாட்டுக் கல்வி வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பாதிப்பினை ஏற்படுத்தும் என கல்விச் சமூகம் கவலை வெளியிட்டுள்ளது. (06)

## பாவனைக்குதவாத பொருட்களை பதிவேட்டிலிருந்து நீக்க அனுமதி

(அச்சுவேலி)

யாழ்ப்பாண கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடந்த 2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற வருடாந்த கணக்கெடுப்பின்போது அழிக்கப்பட வேண்டிய திருத்தத்திற்குட்படுத்த வேண்டிய விற்பனைக்குரிய பொருட்கள் தொடர்பாக வழங்கப்பட்டிருந்த தகவல்களுக்கமைய அப்பொருட்களைப் பொருட்பதிவுப் பதிவேட்டிலிருந்து அகற்றுவதற்குரிய அனுமதிகள் வலயக்கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மேற்படி உபகரணங்களை இனங்கண்டு பொருட் பதிவேட்டிலிருந்து அகற்றுவதற்கான கணக்கெடுப்பில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுடன கோட்டக்கல்விப் பணிப்பாளர்களும் அந்தந்தப் பாடசாலைகளுக்கு விஜயம் செய்து அது தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை அழிக்கப்பட வேண்டிய பொருட்கள் பாடசாலை வளாகத்திலேயே குழி தோண்டிப் புதைக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (03)

## கொட்டகை வேலைகள் பூர்த்தியடையவில்லை நோயாளரை பார்வையிட வருவோர் அவலம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் நோயாளரைப் பார்வையிடவரும் பார்வையாளர்களுக்கென அமைக்கப்பட்டு வரும் கொட்டகை வேலைகள் முற்றுப் பெறாததன் காரணமாக தொடர்ந்தும் பார்வையாளர்கள் வீதியோரத்தில் வெயிலில் நீண்டநேரம் காத்திருக்கவேண்டிய நிலை தொடர்கின்றது.

அடுத்துவரும் மாதங்களில் மழைகாலம் ஆரம்பிக்க இருப்பதால் நோயாளர்களைப் பார்வையிட வருவோருக்காக இது திறந்து விடப்படுமா எனப் பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (பா)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(06.09.2011 செவ்வாய்க்கிழமை

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**
கர வருஷம்
ஆவணி 20 ஆம் நாள்.
இராகுகாலம் 3.04-4.34, சுபநேரம் 10.34-12.04,
நட்சத்திரம்: மூலம் பி.இ 1.24 வரை
திதி: நவமி பி.ப 2.11 வரை
ஆவணி மூலம்

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:-** பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, தேக ஆரோக்கியம், அதிகாரப் போட்டி , மன மகிழ்ச்சி.

**ரிஷபம:-** குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், தேக ஆரோக்கியம், கடன் வசூல், நண்பர் வருகை.

**மிதுனம் :-** பண வரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, தேக ஆரோக்கியம், விருந்துபசாரம், உறவினர் வருகை.

**கடகம்:-** குடும்பத்தில் குதூகலம், பண வரவு, தேக ஆரோக்கியம், விருந்துபசாரம், வீண் அலைச்சல்.

**சிம்மம்:-** பண வரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, தேக ஆரோக்கியம், கடன் வசூல், விருந்துபசாரம்.

**கன்னி :-** குடும்பத்தில் மகிழ்ச்சி, பண வரவு, தேக ஆரோக்கியம், விருந்துபசாரம், நண்பர் தொல்லை.

**துலாம் :-** பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, தேக ஆரோக்கியம், விருந்துபசாரம், நண்பர் தொல்லை.

**விருச்சிகம்:-** பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, தேக ஆரோக்கியம், விருந்துபசாரம், மன மகிழ்ச்சி.

**தனுசு:-** பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, தேக ஆரோக்கியம், வீண் அலைச்சல், நண்பர் வருகை.

**மகரம:-** குடும்பத்தில் மகிழ்ச்சி, பணவரவு, தேக ஆரோக்கியம், கடன் வசூல், நண்பர் வருகை.

**கும்பம் :-** பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, தேக ஆரோக்கியம், கடன் வசூல், மன மகிழ்ச்சி.

**மீனம்:-** குடும்பத்தில் குதூகலம், பணவரவு, தேக ஆரோக்கியம், விருந்துபசாரம், கடன் வசூல்.

## ஹோட்டல் உபசரணையாளர் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை நடத்தும் ஹோட்டல் உபசரணை யாளர் 12 நாள் பயிற்சிப் பட்டறை நேற்று ரில்கோ விடுதியில் ஆரம்பமாகியது.

இந்நிகழ்வில் இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை பிரதிப் பணிப்பாளர் மகிந்த ஜெயதிலக, தொழிற் பயிற்சி அதிகாரசபை, அதிகாரி பராக்கிரம சுபசிங்க பயிற்சி ஆசிரியர் கதிர்காம லிங்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இப்பயிற்சிநெறிக்கு வளவாளர்களாக ஹோட்டல் துணை சார்ந்த சிரேஷ்ட முகாமையாளர்கள் பலர் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கியுள்ளனர்.

12 நாட்களைக் கொண்ட இந்தப் பயிற்சிப் பட்டறையில் தினமும் 2 மணிநேரம் ஆங்கில கற்கை நெறியும், 5 மணிநேரம் ஹோட்டல் துறைசார் கற்கை நெறியும் நடத்தப்படும்.

இந்தப் பயிற்சிநெறி ஓர் அடிப்படை பயிற்சி நெறியாக அமைந்துள்ளதுடன், இதனைச் சிறப்பாக மேற்கொள்பவர்களுக்கு பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப் படவுள்ளதுடன் பயிற்சி மேற்கொள்ளவுள்ளவர்க



ளுக்கான காகிதாதிகளும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் அதிகளவான மாணவ, மாணவிகள் ஆர்வத்துடன் பங்குபற்றியமை சிறப்பான அம்சமாகும. (கா)

## க.பொ.த உயர்தரப் பரீட்சை 3 ஆம் கட்ட மதிப்பீட்டுப் பணிகள்

(வலிகாமம்)

நடந்து முடிந்த க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் வினாத்தாள் 3 ஆம் கட்ட மதிப்பீட்டுப் பணி, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 19 ஆம் திகதி முதல் 3 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக, பாடசாலைப் பரீட்சை மதிப்பீட்டுப் பரீட்சை ஆணையாளர் ட.திலகசிறி தெரிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சைப் பணிகளில் ஈடுபடவுள்ள பிரதம பரீட்சகர் மேலதிக பிரதம பரீட்சகர்கள், உதவிப் பரீட்சகர்கள் ஆகியோருக்கான அறிவுறுத்தற் கூட்டம் செப்ரெம்பர் 10, 11, 12 ஆம் திகதிகளில் கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்குரிய அழைப்புக் கடிதங்கள் பரீட்சைத் திணைக்களத்தினால் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

3 ஆம் கட்ட மதிப்பீட்டுப் பணி பழைய பாடத்திட்டம் புதிய பாடத்திட்டம் என இரு பகுதிகளாக நடைபெறவுள்ளது. (06)

## மந்துவில் கிராமத்திற்கு மின்சார விநியோகம்

(யாழ்ப்பாணம்)


தென்மராட்சி மந்துவில் கிராமத்திற்கு தற்போது மின்சார விநியோகம் வழங்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக இக்கிராமத்திற்கு மின்சார வசதிகள் இல்லாது இங்குள்ள மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்ததுடன் பலதரப்பினரிடம் மினசார விநியோகத்தைப் பெற்றுத்தருமாறு கோரிககை விடுத்திருந்தனர்.

தற்போது யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரினின் முயற்சியால் இக்கிராமத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதனால் இக்கிராம மக்கள் தாம் பெரும் நன்மையடைந்துள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

# குமாரசுவாமி ருவென்ரி 20 கிண்ணம் கைப்பற்றிக் கொண்டது ஜொனியன்ஸ்





(யாழ்ப்பாணம்)

லவேந்திரா, காண்டீபன், கரிகரன் ஆகியோரின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் பற்றீசியன் அணியை வீழ்த்தி, குமாரசுவாமி ருவென்ரி 20 வெற்றிக் கிண்ணத்தை யாழ். ஜொனியன்ஸ் அணி கைப்பற்றிக் கொண்டது.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகத்தால் நடாத்தப்பட்ட குமாரசுவாமி ருவென்ரி 20 கிரிக்கெட் தொடர் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வந்தது.

இப்போட்டித் தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டி கடந்த 3ஆம் திகதி நடைபெற்றது. இதில் பற்றீசியன்ஸ் அணியும், ஜொலிஸ்ரார் அணியும் மோதின.

முதலில் ஆடிய பற்றீசியன் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரியூடர் 38, நோபேட் 26, லிவிங்ரன் 40 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பகீரதன் இரண்டு விக்கெட்டை வீழ்த்தினார்.

பதிலுக்கு ஆடிய ஜொலிஸ்ரார் அணி 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 158 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் மதூசன், கார்த்திக், லக்சுமிகாந்த் தலா 20, ஜனார்த்தனன் 30 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் எரிக், அஜித் தலா மூன்று, நோபேட் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இப்போட்டியில் பற்றீசியன் அணி வெற்றி பெற்றதன் மூலம் இறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியைப் பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் யாழ். சென்றல் அணியும், ஜொனியன்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய ஜொனியன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அன்புஜன் 38, பிரணவன் 39, காண்டீபன் 36 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுபாதீஸ் இரண்டு விக்கெட்டை வீழ்த்தினார்.

பதிலுக்கு ஆடிய சென்றல் அணி 20 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 121 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் கலிஸ்ரன் 24, சலிஸ்ரன் 26, விஷ்ணு 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அகிலன், மயூரன், ஜரிபிரலீன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் ஜொனியன்ஸ் அணி இறுதிப் போட்டியில் விளையாடும் வாய்ப்பைப் பெற்றது.

ஜொனியன்ஸ், பற்றீசியன் அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய யாழ். ஜொனியன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 188 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குமணன் 38, அகிலன் 43, லவேந்திரா ஆட்டமிழக்காது 39, மயூரன் 21, அன்புஜன் 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுஜீவன் மூன்று, சஜீந்திரன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய பற்றீசியன் அணி 17.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் ஜெகன் 24, மொறீஸ் 12, நிதர்சன் 11, பத்மமுரளி 11, சுஜீவன் 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் காண்டீபன் நான்கு, லவேந்திரா, கரிகரன் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இப்போட்டியின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் வித்தியாதரன் வெற்றி பெற்ற அணிக்குக் கிண்ணத்தை வழங்கி கௌரவித்தார். (07)

## பதக்கங்கள் அள்ளினார்



இந்தியாவின் மைசூர் நகரில் நடைபெற்ற சர்வதேச சோட்டோகான் கராத்தே சுற்றுப்போட்டியில் இலங்கையைச் சேர்ந்த அனுர பண்டார ராஜபக்ஷ 3 தங்கப் பதக்கங்களையும் ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் வென்றுள்ளார். இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த போட்டியாளர்கள் இப்போட்டிகளில் பங்குபற்றினர்.

## அலெக்சன் கரப்பந்தாட்டம் அரையிறுதியில் ஐங்கரன்

(மட்டுவில்)

அலெக்சன் ஞாபகார்த்த கரப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதிக்கு மட்டுவில் ஐங்கரன் அணி தகுதி பெற்றுள்ளது.

கைதடி வடக்கு நவசனசமூக நிலையமும், நவசக்தி விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்திவரும் கரப்பந்தாட்டத் தொடரின் காலிறுதிப் போட்டி நேற்று முன்தினம் இரவு நவசக்தி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் தென்மராட்சிப் பிரதேச மட்டத்திலான போட்டியில் மட்டுவில் ஐங்கரன் அணியும், மட்டுவில் கண்ணகி அணியும் மோதியது. இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய மட்டுவில் ஐங்கரன் அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. இதேவேளை, யாழ். மாவட்ட மட்டப் போட்டி தவிர்க்க முடியாத காரணத்தினால் நடைபெறவில்லை. இன்று நடைபெறவுள்ள தென்மராட்சிப் பிரதேச மட்ட அரையிறுதிப் போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் அணியை எதிர்த்து மட்டுவில் ஐக்கிய அணியும், யாழ். மாவட்டப் பிரிவு மட்டத்தில் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் 'ஏ' அணியை எதிர்த்து அச்சுவேலி விக்னேஸ்வரா அணியும் மோதவுள்ளன. (118)

## ஈகிள்ஸை 5 விக்கெட்டால் வென்றது பல்கலை அணி

(யாழ்ப்பாணம்)

அழைக்கப்பட்ட அணிகளுக்கடையிலான 50 ஓவர்கள் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் போட்டி ஒன்றில் யாழ். பல்கலைக்கழக அணி ஐந்து விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

யாழ் பல்கலைக்கழக விளையாட்டு அவையினரால் அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான 50 ஓவர்கள் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடர் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியும், ஈகிள்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய ஈகிள்ஸ் அணி, 27 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 116 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அனுரதன் 22, விஷ்பரூபன் 11, முல்லைத் திவ்யன் 33, ராஜ்குமார் 19 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கிரிசாந்தன், ஜெயரூபன் தலா நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய யாழ். பல்கலைக்கழக அணி, 25.3 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஜெயரூபன் 40, ஜெனார்த்தன் 16, செல்ரன் ஆட்டமிழக்காது 19 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் செயோன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இப்போட்டித்தொடரில் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் அணிக்குப் பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் என்றும், ஆட்ட நாயகன், தொடர் நாயகன் விருதும் வழங்கப்படும் என்றும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (07)

## ஸ்ரான்லி அணியைத் தோற்கடித்து 2ஆவது சுற்றுக்குச் சென்றது கே.சீ.சீ.சீ

(யாழ்ப்பாணம்)

கே.சீ.சீ.சீ. வெற்றிக் கிண்ண 30 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் தொடரின் இரண்டாவது சுற்றுக்கு கே.சீ.சீ.சீ. 'ஏ' அணி தகுதி பெற்றுள்ளது. இப்போட்டித் தொடர் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

முதல் சுற்று ஆட்டமொன்றில் ஸ்ரான்லி அணியும், கே.சீ.சீ.சீ. 'ஏ' அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய ஸ்ரான்லி அணி, 29.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கருணாராஜ் 21, கிருபாகரன் 29, றஜீவ்காந் ஆட்டமிழக்காது 28 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் உத்தமன் ஆறு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு ஆடிய கே.சீ.சீ.சீ. 'ஏ' அணி 23.1 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் பிரகாஸ் 60, சாம்பவன் 41, உத்தமன் 30 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுரேஸ் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். (07)

## பூப்பந்தாட்டம்

(கொழும்பு)

அரச சேவை பூப்பந்தாட்ட சங்கம் ஒழுங்கு செய்துள்ள அரச சேவைத் திணைக்களங்களுக்கிடையிலான பூப்பந்தாடடச் சுற்றுப் போட்டி இம் மாதம் 21, 22, 23 ஆம் திகதிகளில் பூப்பந்தாட்ட சங்க மத்திய நிலைய உள்ளக அரங்கில் இடம்பெறவுள்ளது. 12 போட்டி நிகழ்ச்சிகளைக் கொண்ட இத் தொடரில் பங்கு கொள்ள விரும்பும் அரச சேவைத் திணைக்களங்கள் தமது விண்ணப்பப்படிவங்களை இம் மாதம் 8ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு கமால கமலத்துடன் (0773072015) தொடர்பு கொள்ளவும்.


## ராவிட்டின் ஆட்டமிழப்பை எந்த முறையில் வழங்கினர்

(லண்டன்)

ராவிட்டுக்கு எந்த முறையில் ஆட்டமிழப்புக் கொடுக்கப்பட்டது என்பது தனக்கு இன்னும் தெரியவில்லை என இந்திய அணித் தலைவர் டோனி தெரிவித்தார். ராவிட்டின் ஆட்டமிழப்பில் சில சந்தேகங்கள் எழுகின்றன. பந்து தனது துடுப்பில் உரசவில்லை என்று ராவிட் எங்களிடம் கூறினார். ஷாட் ஸ்பொட் தொழில்நுட்பத்திலும் பந்து துடுப்பில் பட்டது போன்று எதனையும் காட்டவில்லை. ஆனாலும் நடுவர் ஆட்டமிழப்புக் கொடுத்து விட்டார். பொதுவாக இது போன்ற ஆட்டமிழப்பு மிகுந்த சந்தேகம் எழும் போது துடுப்பாட்ட வீரருக்குச் சாதகமாகத்தான் தீர்ப்பு வழங்கப்படும். ஆனால் ராவிட் விடயத்தில் அப்படிக் கடைப்பிடிக்கப்படவில்லை. அவருக்கு எந்த முறையில் ஆட்டமிழப்புக் கொடுக்கப்பட்டது என்பது எனக்கு இன்னும் தெரியவில்லை. ஸ்னிக்கோமீற்றர் தொழில் நுட்பம் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டதா? சவுண்ட் அடிப்படையில் ஓடியோ தொழில்நுட்பவியலாளர்கள் ஆட்டமிழப்பு வழங்கினாரா? அல்லது 3ஆவது நடுவர் தனிப்பட்ட முறையில் ஆட்டமிழப்புக் கொடுத்தாரா? இப்படி பல்வேறு நியாயமான கேள்விகள் இந்த விடயத்தில் எழுகின்றன எனவும் தெரிவித்தார்.

## சிறப்புற நிறைவடைந்த உலக தடகள சம்பியன்ஷிப் போட்டி

# பதக்கப் பட்டியலில் அமெரிக்கா முதலிடம்




(டெகு)

உலக தடகள சம்பியன்ஷிப் தடகளப் போட்டித் தொடர் தென்கொரியாவில் நேற்று முன்தினம் சிறப்புற நிறைவடைந்தது. இப்போட்டித் தொடரில் பதக்கப் பட்டியலில் அமெரிக்கா முதல் இடத்தைப் பெற்றுள்ளது.

இப்பதக்கப் பட்டியலில், அமெரிக்கா 12 தங்கம், 8 வெள்ளி, 5 வெண்கலப்பதக்கத்துடன் முதலிடத்தைப் பிடித்தது.

ரஷ்யா 9 தங்கம், 4 வெள்ளி, 6 வெண்கலப்பதக்கத்துடன் 2ஆவது இடமும், கென்யா 7 தங்கம், 6 வெள்ளி, 4 வெண்கலப்பதக்கத்துடன் 3ஆவது இடமும், ஜமைக்கா 4 தங்கம், 4 வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கத்துடன் 4ஆவது இடமும் பெற்றன.

இதேவேளை, ஏழு பேர் கொண்ட இந்திய அணி இத்தொடரில் பங்கு பற்றியபோதிலும் எந்தவொரு பதக்கத்தையும் வெல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜமைக்கா அணி உலக சாதனை




(டேகு)

உலக தடகள சம்பியன்ஷிப் போட்டியின், 4X100 மீற்றர் ஓட்டப்பிரிவில் உசைன் போல்ட் புயல் வேகத்தில் ஓட ஜமைக்கா அணி தங்கம் வென்று உலக சாதனை படைத்தது.

தென்கொரியாவின் டேகு நகரில் உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டி நடக்கிறது. ஆண்களுக்கான 4X100 மீற்றர் ஓட்டம் நேற்று முன்தினம் நடை பெற்றது. இதில், உலக சம்பியனான உசைன் போல்ட், நெஸ்டா கார்டர், மைக் கேல் பிராடர், யோஹன் பிளாக் ஆகியோர் கொண்ட ஜமைக்கா அணி கள மிறங்கியது.

நெஸ்டா கார்டர், பிராடர், பிளாக் மூவரும் முதல் 3 சுற்றுகளை முடித்து, கடைசிச் சுற்றில் போல்ட் ஓடினார். இவர் புயல் வேகத்தில் ஓட ஜமைக்கா அணி 37.04 வினாடிகளில் போட்டித் தூரத்தை கடந்து தங்கம் வென்றது. மேலும், புதிய உலக சாதனையும் படைத்தது. இதற்கு முன், 2008இல் பீஜிங்கில் நடந்த ஒலிம்பிக்கில், 4X100 மீற்றர் ஓட்டப் பிரிவில் இதே ஜமைக்கா அணி 37.10 வினாடிகளில் போட்டித் தூரத்தைக் கடந்ததே உலக சாதனை யாக இருந்தது. பிரான்ஸ் அணி .38.20 வினாடிகளில் கடந்து வெள்ளியும், செயின்ட் கிட்ஸ் மற்றும் நிவிஸ் அணி 38.49 வினாடிகளில் கடந்து வெண் கலமும் வென்றன.

# விதியில் மாற்றமில்லை

(டெகு)

உலக சம்பியன்ஷிப் தடகளப் போட்டியின் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் உலக சாதனை வீரர் உஸைன் போல்ட்டை தகுதி இழக்கச் செய்த தவறான ஆரம்பம் குறித்த விதியில் 2012 ஒலிம்பிக் போட்டிக்கு முன்னர் எந்த மாற்றமும் செய்யப்படமாட்டாது என சர்வதேச தடகள சம்மேளனம் அறிவித்துள்ளது.

இந்த விதியின்படி தடகளப் போட்டியில் வீரர் தவறான ஆரம்பத்தை பெறும்பட்சத்தில் அந்த வீரர் போட்டிக்கான தகுதியை இழந்துவிடுவார். இந்த விதியின் கீழ் தற்போது நடைபெற்று வரும் உலக சம்பியன்ஷிப் தடகளப் போட்டியின் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் தவறான ஆரம்பத்தைப் பெற்ற உஸைன் போல்ட் தங்கப் பதக்கத்தை இழந்தார்.

இதனைத் தொடர்ந்து சர்வதேச தடகள சம்மேளனத்தின் இந்த விதிக்கு பல தரப்புகளில் இருந்தும் விமர்சனங்கள் எழுந்தன. எனினும் லண்டனில் 2012 ஆம் ஆண்டு நடைபெறும் ஒலிம்பிக் போட்டிக்கு முன்னர் இந்த விதியில் எந்த மாற்றமும் செய்யப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி விதி சர்வதேச தடகள சம்மேளனத்தினால் கடந்த 2009 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

# ரோகித் அவுட்

(புதுடில்லி)

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது ஒரு நாள் போட்டியின் போது, பந்து தாக்கியதில் விரலில் காயமடைந்த இந்திய வீரர் ரோகித் ஷர்மா எஞ்சிய தொடரில் இருந்து நீக்கப்பட்டார். அவருக்குப் பதிலாக 25 வயதான மனோஜ் திவாரி அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பெங்கால் வீரரான மனோஜ் திவாரி இதுவரை 3 ஒரு நாள் போட்டியில் ஆடியிருக்கிறார்.


# டோனிக்கும் ஆசை

(கொல்கத்தா)

கொல்கத்தாவில் ஆர்ஜன்டீன - வெனிசுலா அணிகள் மோதிய சர்வதேச நட்பு கால்பந்து போட்டி கடந்த 2ஆம் திகதி நடந்தது.

இதில் ஆர்ஜன்டீன வீரர் மெஸ்ஸியிடம் கையெழுத்திட்ட சீருடையை வாங்கித் தனக்கு அனுப்பிவைக்குமாறும், மெஸ்ஸியின் தீவிர ரசிகன் நான் என்றும் இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் டோனி போட்டிக்குழுவுக்கு கடிதம் அனுப்பியுள்ளார். அவர்களும் டோனியின் ஆசையை நிறைவேற்றுவதாக உறுதி அளித்துள்ளனர்.

# அதிகரிக்கும் ரசிகர்கள்



(மும்பை)

இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கரின் படங்களை வரைந்து அனுப்பும் ரசிகர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துச் செல்கிறது. இந்திய அணி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றிய பின்னர் அதிகளவான சித்திரங்கள் கிடைக்கப் பெறுவதாக சச்சினின் முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு ரசிகர்களால் வரைந்து அனுப்பப்பட்ட படங்களை சச்சின் டெண்டுல்கர் பார்வையிட்டு மகிழ்ச்சியில் ஆழ்ந்துள்ளார். உலகில் பல்வேறு நாடுகளிலிருந்தும் அவருடைய தோற்றத்தைச் சித்திரங்களாக வரைந்து அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# செரீனா, வோஸ்னியாக்கி, பெடரர் 4ஆவது சுற்றுக்கு முன்னேற்றம்

(நியூயோர்க்)

அமெரிக்கன் ஓப்பன் ரென்னிஸ் போட்டிகளில் மகளிர் ஒற்றையர் பிரிவு நான்காவது சுற்றிற்கு அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், டென்மார்க்கின் வோஸ்னியாக்கி, பெடரர் முன்னேறியுள்ளனர்.


உலகத் தரவரிசையில் 28ஆவது இடத்தில் உள்ள செரீனா வில்லியம்ஸ், 4ஆவது தரவரிசை வீராங்கனையான பெலாரசின் விக்டோரியா அசரென்காவை 6-1, 7-6 (7-5) என்ற நேர் செட்களில் தோற்கடித்து நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு 3ஆவது சுற்றுப் போட்டியில் முதல நிலை வீராங்கனையான கரோலின் வோஸ்னியாக்கி அமெரிக்காவின் வோனியா கிங்கை 6-2, 6-4 என்ற நேர்செட்களில் எளிதாக வென்று முன்னேறினார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு நான்காவது சுற்றிற்கு ரோஜர் பெடரரும், ஜோகோவிச்சும் முன்னேறியுள்ளனர்.

உலகத் தரவரிசையில் 3ஆவது இடத்தில் உள்ள சுவிட்சர்லாந்து வீரர் ரோஜர் பெடரர், 27ஆவது தர வரிசை வீரரான குரோஷியாவின் சிலிச்சை 3ஆவது சுற்றில் எதிர் கொண்டார். முதல் செட்டை 6-3 என்று கைப்பற்றிய பெடரரை 2ஆவது செட்டில் கடும் போட்டி கொடுத்து 6-4 என்ற செட் கணக்கில் சிலி கைப்பற்றினார். அதன பின்னர் பெடரர் கை ஓங்கியது. 3ஆவது செட்டை 6-4 என்றும் 4ஆவது செட்டை 6- 2 என்றும் கைப்பற்றி 4ஆவது சுற்றிற்கு முன்னேறினார். மற்றொரு 3ஆவது சுற்றுப் போட்டியில், உலகத் தரவரிசையில் முதலிடத்தில் உள்ள செர்பிய வீரர் நோவாக் ஜோகோவிச் ரஷ்ய வீரர் நிக்கோலே டெவிடென்கோவை 6-3, 6-4,6-2 என்ற நேர்செட்களில் எளிதாக வென்று 4ஆவது சுற்றிற்கு முன்னேறினார்.

# நோயிலிருந்து செரீனா மீண்டது அதிசயம் என்கிறார் தந்தை



(நியூயோர்க்)

செரீனா செத்துப் போய விடுவாள் என்று நான் நினைத்தேன். அந்த இக்கட்டான நிலையிலிருந்து மீண்டு அவர் எப்படி வாழந்து கொண்டு இருக்கிறார் என்பது இன்னும் எனக்குத் தெரியவில்லை என செரீனாவின் தந்தை ரிச்சர்ட் வில்லியம்ஸ் வியப்புடன் தெரிவித்தார்.

செரீனாவுக்கு காலில் கண்ணாடி கிளாஸ் குத்தியதால் ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை பெறச் சென்ற போது அவருக்கு நுரையீரலில் ரத்தம் உறைந்திருப்பது தெரியவந்தது. இதனால் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார. அப்போது செரீனா செத்துப் போய் விடுவாள் என்று நான் நினைத்தேன். அந்த இக்கட்டான நிலையில் இருந்து மீண்டு அவள் எப்படி வாழ்ந்து கொண்டு இருக்கிறார் என்பது இன்னும் எனக்குத் தெரியவில்லை. இந்தப் பிரச்சினையால் ஒரு வருடத்திற்கு அவர் எந்தப் போட்டியிலும் ஆடவில்லை. மீண்டும் களம் திரும்பி சிறப்பாகச் செயற்படுவதை எண்ணும்போது எனக்கு எல்லையில்லா ஆனந்தமாக உள்ளது எனவும் தெரிவித்தார்.

# சிம்பாப்வேயுடனான டெஸ்ட் பாகிஸ்தான் வெற்றி

(புலவோயோ))

சிம்பாப்வே அணிக்கெதிரான டெஸ்ட போட்டியில் பாகிஸ்தான் அணி ஏழு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இரு அணிகளுக்குமிடையிலான ஒரு டெஸ்ட் போட்டி நேற்று புலவோயோ மைதானத்தில் நிறைவடைந்தது.

54 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸை ஆடிய சிம்பாப்வே அணி அதன் இரண்டாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தைபு 58 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் மொகமட் ஹபீஸ், அசார் சீமா தலா நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 88 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய பாகிஸ்தான் அணி, மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைநதது. இதில் மொகமட் ஹபீஸ் 38, அசார் அலி 22 ஓட்டங்களைப் பெற்றதுடன் ஆட்டமிழக்காது யுனிஸ்கான் 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ப்ரீஸ் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். போட்டியின் ஆட்ட நாயகனாக மொகமட் ஹபீஸ் தெரிவானார்.




சிம்பாப்வே முதல் இனிங்ஸ் 412, பாகிஸ்தான் முதல் இனிங்ஸ் 466.

இதேவேளை, இரு அணிகளுக்குமிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் போட்டி எதிர் வரும் எட்டாம் திகதி நடைபெறவுள்ளது.

## 3 பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக ஊழல்மோசடி குற்றச்சாட்டுக்கள்

(கொழும்பு)

பொலிஸ் திணைக்களத்தின் மூன்று உயர் அதிகாரிகளுக்கு எதிராக ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

சட்டவிரோதமான முறையில் சொத்துக்களை குவித்துள்ளதாக குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவர்களுக்கெதிராக லஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மூன்று உயரதிகாரிகளிடமும் விரைவில் விசாரணை நடத்தப்படவுள்ளதாக ஆணைக்குழுவின் உயர் அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே சட்டவிரோதமான முறையில் சொத்துக்களை குவித்தல், லஞ்சம் பெற்றுக் கொள்ளல் உள்ளிட்ட பல்வேறு ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள் 28 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக முன் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பு பிரதேசத்தில் ஆடம்பர சொகுசு வீடொன்றை அமைத்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக சிவில் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்படவுள்ளது.

## அரசின் பிரச்சினைகளை மூடி மறைக்கவே சிமெந்து பிரச்சினை உருவாக்கமாம்

### மக்கள் விடுதலை முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கத்தின் பிரச்சினைகளை மூடி மறைக்கும் வகையில் சிமெந்துப் பிரச்சினையை தற்போது தோற்றுவித்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னனி தெரிவித்துள்ளது. பிலியந்தலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்னெத்தி இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

அரசாங்கத்தினால் நாட்டிலுள்ள பிரச்சினைகளை தற்போது மூடிமறைக்க முடிந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். தரம் குறைந்த சிமெந்து கொண்டுவரப்படுகின்றமையால் அது தலைப்பாக மாறியுள்ளதாகவும் தரம் குறைந்த சிமெந்துத் தொடர்பில் அனைத்துத் தரப்பினரும் கருத்து வெளியிடுவதாகவும் சுனில் ஹந்துன்னெத்திமேலும் தெரிவித்தார். அவை அனைத்திற்கும் பின்னர் இறுதியில் தரம் குறைந்த சிமெந்து சந்தையிலிருந்து வெளியேற்றப்படுமெனவும் மக்கள் விடுதலை முன்னணி சுட்டிக்காட்டுகின்றது.

## வரிச்சலுகை இடைநிறுத்தம் தளர்த்தப்படவில்லை

(கொழும்பு)

இலங்கைக்கு ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகையை இடைநிறுத்தும் தீர்மானம் தொடர்ந்தும் அமுலில் உள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை நீக்கப்பட்டுள்ளதாக பல்வேறு ஊடகங்களில் வெளியிட்டுள்ள செய்தி உண்மைக்குப் புறம்பானது என கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவிப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை உள்ளிட்ட சில நாடுகளுக்கு வழங்கப்பட்ட ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை மீண்டும் வழங்குவது தொடர்பாகவோ வழங்காதிருப்பது தொடர்பாகவோ அமெரிக்க காங்கிரஸில் வாக்கெடுப்பு நடத்தப்படவில்லை எனவும் தூதரகம் தெரிவித்தது. இலங்கைக்கு வழங்கப்பட்டு வந்த இவ்வரிச் சலுகை கடந்த ஜனவரி மாதம் முதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசாங்கத்திற்கெதிரான செயற்பாடுகளில் புலம்பெயர்தமிழர்களே ஈடுபடுகின்றனர்

### அமைச்சர் மகிந்த சமரசிங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

**வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர்களே அரசாங்கத்திற்கும் நாட்டிற்கும் எதிராக செயற்பட்டு வருவதாக அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**



பிரபல சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அமைச்சர் சமரசிங்க இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

பயங்கரவாதத்தை இல்லாமல் செய்து நாட்டை நல்ல நிலைக்கு கொண்டு வந்தமை சில சந்தர்ப்பவாத தமிழர்களுக்கு பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

புலம்பெயர் தமிழர்களிடம் போதியளவு பணம் காணப்படுகின்றது, அதனைக் கொண்டு நாட்டுக்கு எதிராக பிரசாரம் செய்கின்றனர்.

எதிர்காலத்திலும் நாட்டுக்கு எதிராக குறித்த புலம்பெயர் தமிழர்கள் பிரசாரங்களை மேற்கொள்ளக் கூடும்.

போரின் பின்னர்,சமாதானம், அபிவிருத்தி மற்றும் மக்களின் மனித உரிமைகளை நிலைநாட்ட பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நடவடிக்கைகளுக்கு தடை ஏற்படுத்த முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்படக் கூடும் என்ற அச்சத்தினால் அவசரகாலச் சட்டம் நீக்கப்படவில்லை.

அவசரகாலச் சட்டத்தை தொடர்ந்தும் நீடிப்பதற்கான அவசியமில்லை என ஆய்வுகளின் மூலம் தெரியவந்தது அதன் பின்னரே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அந்த சவாலை முறியடிக்கத் தயார்.

பயங்கரவாத நடவடிக்கைகளை கட்டுப்படுத்த அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளும் சட்டங்களை அமுல் படுத்தி வருகின்றன.

## தமிழர் விரோத நிலையை இந்தியா எடுக்க நாராயணனே காரணம் என்கிறது விக்கிலீக்ஸ்




(கொழும்பு)

இலங்கை விவகாரத்தில் தமிழர் விரோத நிலைப்பாட்டை இந்தியா எடுத்ததற்கு இந்தியப் பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருந்த எம்.கே. நாராயணனே காரணம் என்று விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கின் முக்கியமான ஆலோசகராக எம்.கே .நாராயணனே இருந்ததாகவும், இலங்கை விவகாரத்தில் அவரே சிங்கள சார்பு நிலையை எடுக்குமாறு அவருக்கு ஆலோசனை கூறியதாகவும் விக்கிலீக்ஸ் குறிப்பிட்டுள்ளது.

சீனாவின் கொள்கை தொடர்பாக பொய்யான அச்சமூட்டும் தகவல்களைக் கூறியே எம்.கே. நாராயணன், இந்த முடிவை எடுக்கக் காரணமாக இருந்ததாகவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. இது ஜவர்கர்லால் நேருவை கிருஸ்ணமேனன் தவறாக வழிநடத்தியது போலவே மன்மோகன்சிங்கை எம்.கே.நாராயணன் வழிநடத்தியிருப்பதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது. இந்த இருவருமே இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கைகளை தவறாக வழிநடத்தியதாகவும் இந்திய ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

புதுடில்லியில் உள்ள அமெரிக்கத் தூதுவர் திமோதி ஜே ரோமர் கடந்த 2009டிசம்பர் 17ஆம் நாள் அனுப்பிய தகவல் குறிப்பிலேயே எம்.கே நாராயணன் பற்றிய இந்தக் குறிப்பு இடம்பெற்றுள்ளதாகவும் விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

## ஐ.நா.மனித உரிமை கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக தீர்மானம்

### என்கிறது லக்பிம

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றுவதுற்கு சில நாடுகளும் புலம்பெயர் தமிழர்களும் முயற்சி மேற்கொண்டு வருவதாக லக்பிம பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இறுதிக் கட்டப் போரின் போது இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றச் செயல்கள் இடம்பெற்றதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் தமிழர்கள் மற்றும் மேற்குலக நாடுகளின் இந்த சதித் திட்டம் தொடர்பில் புலம்பெயர் இலங்கையர்கள் அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளனர்.

அமெரிக்கா,இங்கிலாந்து,அவுஸ்ரேலியா,ஜேர்மன் மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர்களின் ஒத்துழைப்புடன் தீர்மானம் நிறைவேற்றும் முயற்சிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

எவ்வாறெனினும்,இந்த முயற்சிகளை முறியடிப்பதற்காக ஆளும் கட்சி அமைச்சர்களும் சட்ட வல்லுனர்களும் ஜெனீவாவிற்கு விஜயம் செய்ய உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## நாட்டிலுள்ள அனைத்து மக்களையும் அரசு நிர்க்கதிக்குள்ளாக்கியுள்ளது

(கொழும்பு)



கருவில் இருக்கும் சிசு முதல் வயோதிபர் வரையில் அனைவரையும் அரசாங்கம் நிர்க்கதியாக்கியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் இணைப் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் எதேச்சாதிகாரப் போக்கினால் சிசுக்கள்,கர்ப்பிணிகள், இளைஞர்கள், யுவதிகள் என நாட்டின் பல்வேறு தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஊழல் மோசடிகளைத் தொடர்ந்தும் அனுமதிப்பதா என்பதனை நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும். எதிர்காலச் சந்ததியினரின் நலனைக் கருத்திற் கொண்டு செயற்பட வேண்டியது அனைவரினதும் கடமையாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மிலிந்த மொறகொட கொழும்பில் வெற்றி பெறுவார்


### மொஹம்மட் நம்பிக்கை

(கொழும்பு)

கொழும்பு நகரை அபிவிருத்தி செய்வதற்கான அனுபவம் மிக்க ஒரேயொரு நபர் மிலிந்த மொரகொட கொழும்பு மாநகர சபையின் முன்னாள் மேயரான எம்.எச் மொஹம்மட் தெரிவித்துள்ளார்.

மிலிந்த மொரகொட சிறப்பாகப் பணியாற்றக் கூடிய சக்தி மிக்க நபரெனவும் அவர் ஆட்சியில் இருந்த போது இனமத பேதமின்றி அனைவருக்கும் ஒரேமாதிரியாக சேவையாற்றியதாக அவர் சுட்டிக்காட்டினார். இதனால் அவ்வாறான தொரு நபரை தெரிவு செய்வது பெருமைக்குரிய விடயம் எனவும் மிலிந்த மொரகொட மற்றையவர்கள் போட்டியிடும் குழுக்களை விடவும் வெற்றி பெறுவார் என்பதில் சந்தேகமில்லை எனவும் கொழும்பு மாநகர சபை யின் முன்னாள் மேயரான எம்.எச் மொஹம்மட் தெரிவித்துள்ளார்.

## ரயில்களின் வேகக் கட்டுப்படுத்திகள் சரியாக இயங்கவில்லையென குற்றச்சாட்டு



(கொழும்பு)

சீனாவிலிருந்து 2008 ஆம் ஆண்டு இறக்குமதி செய்யப்பட்ட ரயில் கட்டமைப்புக்களில் வேகக் கட்டுப்படுத்தி சரியாக செயற்படாததன் காரணமாக ரயில் செலுத்துநர்கள் பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக ரயில் செலுத்துநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

குறித்த கட்டமைப்புக்களில் காணப்படும் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் ஐ.எல்.கே திஸாநாயக்க தெரிவித்தார். வேகக் கட்டுப்படுத்தி உரிய முறையில் இயங்காத காரணத்தினால் செலுத்துநர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட வேகக் கட்டுப்படுத்திகளை பொருத்தும் வகையிலான சில இயந்திரங்கள் மாத்திரம் நாட்டில் இருப்பதாக ரயில்வே கட்டுப்பாட்டு அதிகாரி பீ.ஏ.ஜி ஆரியரத்ன தெரிவித்தார்.

எம்-04 என்ற வகை இயந்திரங்களுக்கு மாத்திரமே இவை பொருந்துவதாகவும் அவை மிகவும் பழைமை வாய்ந்தது தெனவும் குறிப்பிட்ட அவர், வேகக் கட்டுப்படுத்திகள் இறக்குமதி செய்யப்பட்டதன் பின்னர் இந்நாட்டு தொழில்நுட்பவியலாளர்களால் மீளமைப்பு செய்யப்பட்டதாகக் கூறினார்.

தற்போது இதில் சில குறைபாடுகள் நிலவுகின்ற போதிலும் அவை போக்குவரத்திற்கு அச்சுறுத்தல் இல்லையென ரயில்வே கட்டுப்பாட்டு அதிகாரி சுட்டிக் காட்டியுள்ளார்.

ரயிலை நிறுத்தவேண்டிய தூரத்திற்கு சற்றுத் தூரம் சென்றதன் பின்னரே ரயில் நிற்பதாகக் குறிப்பிட்ட அவர் அதனால் பாரிய பிரச்சினைகள் இல்லையெனவும் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் இந்தப் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றுக்கான தீர்வுகள அடங்கிய அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு பொறியியலாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் ரயில்வே கட்டுபபாட்டு அதிகாரி பீ.ஏ.ஜி ஆரியரத்ன மேலும் கூறினார்.

## ரயில்பாதை நில ஆக்கிரமிப்பு அகற்றுமாறு கோரிக்கை

(கொழும்பு)

வடக்கில் ரயில்பாதை நிர்மாணப் பணியில் ஈடுபட்டுள்ள இந்திய நிறுவனம், பலாலிக்கும், காங்கேசன்துறைக்கும் இடையிலான ரயில்பாதை அமைக்கப்படவுள்ள பகுதிகளில் மேற்கொள்ளபபட்டுள்ள நில ஆக்கிரமிப்புகளை தாமதமின்றி அகற்றித் தருமாறு அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

இப்பகுதியிலுள்ள ரயில்பாதையில் பெருமளவு காணிகளை மக்கள் ஆக்கிரமித்திருப்பதாகவும், ரயில்பாதைப் புனரமைப்புப் பணிகளை ஆரம்பிப்பதற்கு அவர்கள் அப்புறப்படுத்தப்பட வேண்டியுள்ளதாகவும் பொழுகாமையாளர் எஸ்.எல்.தாஸ்குப்தா தெரிவித்தார்.

இப்பகுதியில் ரயில்பாதைப் புனரமைப்புப் பணியை மேற்கொள்வதற்கான ஒபபந்தத்தை நிறுவனத்திற்கு வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது. இது தொடாபான புரிந்துணர்வு ஒப்பந்தம் அரசாங்கத்திற்கும் மேற்படி நிறுவனத்திற்கும் இடையில் விரைவில் கையெழுத்திடப்படவுள்ளது.

## கிழக்கில் 5 பாலங்களின் புனரமைப்பு இம்மாத இறுதிக்குள் பூர்த்தியடையும்

(திருகோணமலை)

திருகோணமலையையும் மட்டக்களப்பையும் இணைக்கும் 5 பாலங்களின் நிர்மாணப் பணிகளை இந்த மாதம் 30 ஆம் திகதிக்குள் பூர்த்தி செய்து வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

திருகோணமலை - மட்டக்களப்பு வீதிப் புனரமைப்பின் கீழ் 5 பாலங்களின் நிர்மாணப் பணிகளும் 99 கிலோமீற்றர் நீளமான வீதிப் புனரமைப்பும் இடம்பெற்று வருகின்றன. இதற்காக 10,500 மில்லியன் ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உப்பாறு, கங்கை, இறால்குழி, வெருகல, காயங்கேணி ஆகிய பாலங்களே நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் இறால்குழி, வெருகல், காயங்கேணி ஆகிய 3 பாலங்களின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன. இந்த நிலையில் உப்பாறு, கங்கை ஆகிய பாலங்களின் நிர்மாணப் பணிகளும் வீதிப் புனரமைப்பும் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிர்மாணப்பணிகள் நிறைவுற்றதும் திருகோணமலை - மட்டக்களப்புக்கான தற்போதைய பயணத்தில் 100 மீற்றர் தூரம் குறைவடையும். மூதூர், தோப்பூர் வெருகல் பிரதேச மக்களும் தரைவழிப்பாதையூடாக குறுகிய நேரத்தில் செல்ல முடியும்.

## 75 மில்லியன் லீற்றர் மதுபானம் 2010 ஆம் ஆண்டில் நுகர்வு

(கொழும்பு)

அரசாங்கத்தினால் போதைக்கு முற்றுபபுள்ளி வைப்பதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும் 2010 ஆம் ஆண்டு 75 மில்லியன் லீற்றர் மதுபானம் நுகரப்பட்டுள்ளதாக கலால் திணைக்களம் அறிவித்துள்ளது.

2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5 மில்லியன் லீற்றர் மேலதிகமாக நுகரப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டு 1071 மதுபானசாலைகள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன.

அதேவேளை நாடளாவிய ரீதியில் 2009 ஆம் ஆண்டு 2820 மதுபானசாலைகளும் இருந்துள்ளன என்றும் திணைக்களம் அறிவித்துள்ளது.

## சம்பளத்தை உயர்த்துமாறு கோரி தோட்டத் தொழிலாளர் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

நுவரெலிய மாவட்டம் ராகலைப் பிரதேசத்தில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை உயர்த்தக்கோரி இலங்கை தோட்ட சேவையாளர் சங்கம் போராட்டம் ஒன்றை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆர்ப்பாட்டத்தில் பெருமளவு தோட்டத் தொழிலாளர்கள் கலந்து கொண்டுள்ளனர். தோட்டக் கம்பனிகள் தொடர்ந்தும் தம்மை ஏமாற்றுவதாக அவர்கள் தெரிவிக்கினறனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் சம்பளம் கொடு, வாழக் காணி கொடு என்ற கோஷங்களை எழுப்பி தமது எதிர்ப்பினைத் தெரிவித்தனர்.

மேலும் தோட்டக் கம்பனிகள் கூட்டு ஒப்பந்தத்தைக் கைவிட்டு மீண்டும் பேச்சுவார்த்தைக்கு முன்வர வேண்டும் என அவர்கள் தெரிவித்துள்ளனர். தமக்கான நியாயம் கிடைக்கும் வரை போராட்டங்கள் தொடரும் என தொழிலாளர்கள் எச்சரித்துள்ளனர்.

# இலங்கை மீதான சர்வதேச விசாரணைக்கு ஜெனீவா மாநாட்டில் இணங்கக்கூடாது

## இலங்கைக் குழுவுக்கு குணதாச அமரசேகர அறிவுறுத்து



(கொழும்பு)

ஜெனீவா மாநாட்டில் இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணைக்கான தீர்மானம் மேற்கொள்ளப்படும். இதன் பின்னணியில் இந்தியா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளே உள்ளன. எந்தவொரு காரணத்திற்காகவும் சரவதேச விசாரணைக்கு ஜெனீவா செல்லும் இலங்கை பிரதிநிதிகள் குழு இணக்கம் தெரிவிக்கக் கூடாது என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்தார்.

இது தொடர்பாக கலாநிதி குணதாச அமரசேகர தொடர்ந்தும் கூறுகையில், நாட்டில் யுத்தம் முடிந்ததன் பின்னரும் அதற்கு முன்னரும் சர்வதேச நாடுகள் இலங்கைக்கு எதிராக சூழ்ச்சிகளைச் செய்து வந்தன.

பல சந்தர்ப்பங்களில் உள்நாட்டின் இறையாண்மையை கேள்விக்குறியாக்கும் வகையில் சர்வதேசம் எல்லை மீறிய தலையீடுகளையும் அழுத்தங்களையும் மேற்கொண்டது.

ஆனால் தற்போது நாட்டை மண்டியிட வைக்கும் முயற்சிகளில் சர்வதேச சக்திகள் தீவிரமாகச் செயற்பட ஆரம்பித்து விட்டன. எதிர்வரும் 12 ஆம் திகதி ஜெனீவாவில் நடைபெறவுள்ள சர்வதேச மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளது.

ஏனென்றால் இங்கு அங்கத்துவம் வகிக்கும் நாடுகளில் பெரும் தொகையான நாடுகள் இலங்கையின் எதிரிகளாகவே உள்ளன. எனவே எதிரியின் வீட்டில் சிறந்த உபசாரத்தை எம்மால் எதிர்பார்க்க முடியாது.

ஐக்கிய நாடுகள் சபை நிபுணர் குழு அறிக்கையின் ஊடாக சர்வதேச விசாரணைகளை மேற்கொள்ள இந்தியாவும் அமெரிக்காவும் அழுத்தம் கொடுக்கும். ஜெனீவா செல்லும் இலங்கைக் குழுவினருக்கு மிக முக்கியமான பொறுப்புகள் உளளன. அவர்கள் பேசும் போது தலையை ஆட்டி விட்டு வந்து விடக்கூடாது.


நாட்டிற்கு எதிரான தீர்மானங்களை தோற்கடிக்க பொது மக்கள் தயாராகவே உள்ளனர். அது மட்டுமன்றி துரோகிகளையும் இனங்கண்டு தேசப்பற்றுள்ள மக்கள் விரட்டியடிப்பர் என்றார்.

## சட்டவிரோத மருந்துகளை விற்பனை செய்த 10 மருந்தகங்களுக்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

சட்டவிரோதமாக மருந்துகளை விற்பனை செய்த 10 மருந்தகங்களுக்கு எதிராக சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. வாசனைத் திரவியங்கள் மற்றும் ஔடத சபையின் அதிகாரிகளால் நேற்றுமுன்தினம் இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்படட்தாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. ஒருகொடவத்தை, தெமட்டகொட, அத்திடிய, மொரட்டுவ, பாணந்துறை, போன்ற பகுதிகளில் இந்தச் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தச் சுற்றிவளைப்புகளின் போது மருத்துவ விதிகளை மீறி மருந்துப்பொருட்களை விற்பனை செயதல், சட்ட விரோதமாக மருந்துப் பொருட்களை களஞ்சியப்படுத்தி வைத்தல் போன்ற குற்றங்கள் தொடர்பில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.



குருநகர் புனித காணிக்கை மாதா ஆலயத்தின் முகப்பு தற்போது இடிக்கப்பட்டு புதிய தோற்றத்துடனான முகப்பும், முன் மண்டபமும் கட்டப்படவுள்ளது. ஆலயத்தின் பின்பகுதி முற்றாக இடிக்கப்பட்டு துரிதகதியில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று அன்னையின் திருவிழா தினத்தில் யாழ். ஆயரினால் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (21)

## மெனிக்பாம் கிராமத்தில் 109 வீடுகள் கையளிப்பு

(கொழும்பு)

செட்டிகுளம் மெனிக்பாம் கிராமத்தில் இடம் பெயர்ந்து மீள்குடியேறிய மக்களுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியுடன் கட்டப்பட்ட 109 வீடுகளை கையளிக்கும் வைபவம் நாளை செட்டிக்குளத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கலந்து கொள்வார் என செட்டிகுளப் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

ஒவ்வொரு வீடும் மூன்று இலட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் கட்டப்பட்டுள்ளது என பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் இணைந்து விவசாய உள்ளீடுகளை முல்லைத்தீவு சிலாவத்தை விவசாயிகளுக்கு வழங்குவதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரையும் காணலாம்.



# யாழ்.குடாநாட்டில் பிரதேச செயலக பிரிவு ரீதியாக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பனம் விதை நாட்டல்

## பனை அபிவிருத்தி சபை நடவடிக்கை

(கொழும்பு)

பனை அபிவிருத்தி சபையினால் யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் பனம் விதைகளை நடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் காணப்படும் இந்து மயானங்கள்,பொது இடங்கள் ஆகியவற்றில் இந்த பனம் விதைகள் நடப்படவுள்ளன.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஐயாயிரம் பனம் விதைகளும் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஐயாயிரம் பனம் விதைகளும், வேலணை பிரதேச செயலகப் பிரிவில் பத்தாயிரம் பனம் விதைகளும், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பத்தாயிரம் பனம் விதைகளும், யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் ஐயாயிரம் பனம் விதைகளும், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஐயாயிரம் பனம் விதைகளும், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் ஐயாயிரம் பனம் விதைகளும், நாட்டப்படவுள்ளன சங்கானை பிரதேச செயலாளர் பிரிவில் பத்தாயிரம் பனம் விதைகளும் உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பத்தாயிரம் பனம விதைகளும் தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் இருபதாயிரம் பனம் விதைகளும், கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் ஐயாயிரம் பனம் விதைகளும், சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் பதினையாயிரம் பனம் விதைகளும், கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவில் பதினையாயிரம் பனம் விதைகளும், பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் பத்தாயிரம் பனம் விதைகளும், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருபதாயிரம் பனம் விதைகளும் நடப்படவுள்ளன.

# தடைசெய்த மீன்பிடி உபகரணங்கள் வட,கிழக்கில் பயன்படுத்தப்படுகின்றன

## தேசிய கடற்றொழில் ஒத்துழைப்பு அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பகுதிகளில் கடற்றொழில் நடவடிக்கைகளின்போது தடை செய்யப்பட்ட மீன் பிடி உபகரணங்கள் அதிகளவில் பயன்படுத்தப்படுவதாக தேசிய கடற்றொழில் ஒத்துழைப்பு அமைப்பு தெரிவிக்கிறது. இந்த நிலையில் சிறிய உபகரணங்களைப் பயன்படுத்தி மீன் பிடியில் ஈடுபடும் மீனவர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குவதாக அமைப்பின் ஏற்பாட்டாளர் ஹர்மன் குமார தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு கடற்பரப்பில் நிலவும் இந்த நிலைமை தொடர்பாக அரசாங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை. எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவிக்கையில் வடக்கு-கிழக்கு கடற்பரப்பில் தடை செய்யப்பட்ட மீன் பிடி உபகரணங்களில் பயன்பாடு தொடர்பில் இதுவரை முறைப்பாடு எதுவும் தமக்கு கிடைக்கவில்லை எனவும் எனினும் குறித்த விடயம் தொடர்பில் தாம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

# பகிடிவதையில் பாதிக்கப்பட்ட மாணவன் கல்வியைத் தொடர்வதற்கு மறுப்பு

(கொழும்பு)

பகிடிவதை காரணமாக உளநலம் பாதிக்கப்பட்டிருந்த சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மாணவன் மீண்டும் கல்வி நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளதாக அவரது தாயார் தெரிவித்தார்.

பகிடிவதையின்போது ஏற்பட்ட அனுபவங்கள் தொடர்பில் தமது மகன் தொடர்ந்தும் கடும் பீதியில் இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

உளநலம் பாதிக்கப்பட்ட ருவன் பிரசன்ன இன்னும் பூரண குணமடையவில்லை எனவும் அவர் தொடர்ச்சியாக எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையில் மருத்துவ சிகிச்சை பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொலன்ன,புலுதொட்ட பகுதியைச் சேரந்த குறித்த மாணவன் உயர்தரப் பரீட்சையில் அதியுயர் சித்திகளைப் பெற்று கடந்த வருடம் சப்ரகமுவ பல்கலைக்கழ்கத்தில் இணைந்து கொண்டார்.

பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட மாணவக் குழுவொன்றின் பகிடிவதைக்கு இலக்காகி சுகவீனமுற்ற நிலையில், கடந்த மார்ச் 28ஆம் திகதி அவர் பலாங்கொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் இரத்தினபுரி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இது தொடர்பாக சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ரஞ்சித் எஸ்.ரூபசிங்க கருத்துத்தெரிவிக்கையில், குறித்த மாணவனின் எதிர்காலக் கல்வி நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படுமென தெரிவித்தார்.

இதேவேளை தமது சகோதர மாணவனுக்கு பாதுகாப்பை வழங்கி அவரது கல்வி நடவடிக்கைகளை உரிய முறையில் மேற்கொள்ள உதவுவதாக சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர் சங்கம் தெரிவித்தது.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது அமைதியை சீர்குலைப்போர் கைதாவர்

## பொலிஸ் தலைமையகம் தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தை மீறுவோரும் அமைதியை சீர்குலைப்போரும் கைது செய்யப்படுவார்கள் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதற்காக நாடளாவிய ரீதியில் பொலிஸ் ரோந்துச் சேவைகள் செயற்படுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் பாதுகாப்பு கடமைகளிற்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் மாஅதிபர் காமினி நவரத்ன கூறியுள்ளார்.


எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குரிய வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் இதுவரை 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சட்டவிரோதமான முறையில் சுவரொட்டிகளை ஒட்டியவர்களும் அமைதியைச் சீர்குலைக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொண்டவர்களும் இதில் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது. சட்டவிரோதமாக தேர்தல் பிரசார சுவரொட்டிகளை ஒட்டிய குற்றச்சாட்டின் பேரில் 1[illegible] பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களில் அனேக மானவர்கள் கொழும்புப் பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

மக்களிடம் விருப்பு வாக்குகளை பெற்றுக்கொள்ளவுள்ள வேட்பாளர்கள் சட்டவிரோத பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டால் மக்கள் மத்தியில் அவர்கள் தொடர்பான நல்லபிப்பிராயத்திற்கு பாதிப்பு ஏற்படும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# போலி வேட்புமனுக்களை சமர்ப்பித்தால் உறுப்புரிமை இரத்து செய்யப்படும்

## தேர்தல்கள் ஆணையாளர்



(கொழும்பு)

ஒக்டோபர் மாதம் 08 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் போலியான முறையில் வேட்பு மனுக்களை தயாரித்து தெரிவத்தாட்சி அதிகாரிகளிடம் சமர்ப்பித்துள்ள அபேட்சகர்கள் வெற்றிபெறும் பட்சத்தில் அவர்களது உறுப்புரிமையினை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தின் பிரகாரம் தம்மிடம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் மேற்படி விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாகவும் போலியான முறையில் வேட்பு மனுக்கள் தயாரித்துள்ளமைக்கு எதிராக அவர்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறினார்.

அவ்வாறே உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் போட்டியிடும்போது வேட்பாளர் ஒருவர் மற்றுமொரு அபேட்சகர் சார்பாக செயற்படுவதற்கு அனுமதி இல்லை எனவும் பிரதான கட்சிகளின் சார்பாக சிறிய கட்சிகளாகவோ அல்லது சுயேட்சைக் குழுக்களாகவோ செயற்பட்டு ஆதரவு திரட்ட முடியாதெனவும் தேர்தல்கள் ஆணையாளர் வலியுறுத்தினார். இது தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் கூறினார்.

# விபத்தில் மரணம்

(வவுனியா)

வவுனியா குட்செட் வீதியில் நேற்றுக் காலை இடம் பெற்ற டிப்பர் வாகனம் துவிச்சக்கர வண்டி விபத்தில் துவிச்சக்கர வண்யில் சென்ற 84 வயதான முதியவர் மரண மடைந்தார். இறந்தவர் பன்றிக்கெய்தகுளம் ஓமந்தை முகவரியைக் கொண்டவர் தற்போது சமயபுரத்தில் வசிப்பவர் எனத் தெரியவந்துள்ளது. காயமடைந்தவரை வவுனியா மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்து சென்றபோது மரணமாகியுள்ளார். சடலம் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது விபத்துக் குறித்து வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (39)

# செல்வபுரம் கிராமத்தில் வீடுகள் நாளை கையளிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் செல்வபுரம் கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட 100 வீடுகள் நாளை காலை 10.00 மணிக்கு பயனாளிகளிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.பத்திநாதன் தெரிவித்தார்.

யுத்தத்தால் அழிவடைந்த வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்கான நிதியுதவியை ஹரித்தாஸ் நிறுவனம் வழங்கியிருந்தது. அவரவர் சொந்தக் காணிகளில் ஒவ்வொரு வீடும் 4,25,000 ரூபா பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்க அதிபர் குறிப்பிட்டார்.



# பிரதான வீதியில் தரையிறங்கிய விமானம்

இரண்டாம் உலக யுத்தத்தில் உபயோகிக்கப்பட்ட Mustang P 51 விமானம் உல்லாச விமானமாக Dijon இல் உபயோகிக்கப்பட்டு வந்துள்ளது. இது Bergerac (Dordogne) இல் இருந்து Bordeaux நோக்கிப் பறப்பில் ஈடுபட்டிருந்தது. இவ் விமானம் Saint-Mexant (Corrčze) கிராமத்தின் மேல் பறந்து கொண்டிருக்கும் போது இயந்திரக் கோளாறுக்கு உள்ளாகியது. விமானி அவசர அவசரமாக விமானத்தை A89 நெடுஞ்சாலையில் தரையிறக்கியுள்ளார். எந்தவிதமான உயிரிழப்புகளோ விபத்தோ இன்றி விமானம் நெடுஞ்சாலையில் தறையிறங்கியது.

விமானி வயல் வெளிக்குள் தரையிறக்கவே முயற்சித்துள்ளார். இயங்க மறுத்த இயந்திரம் விமானி வயல் வெளிக்குள் இறக்க முயன்றபோது திடீரென ஒரு முறை இயங்கி மறுபடி நினறு விட்டதால் தரையிறக்க முடியாது போய்விட்டது. நான் வயல் வெளிக்குள்ளேயே இறக்கியிருக்க வேண்டும். நான் முடிவை மாற்றியதாலேயே நெடுஞ்சாலையில் தறையிறக்கவேண்டி வந்துள்ளது. ஒரு விமானி பறப்பில் ஈடுபட்டிருக்கும் போது எடுக்கும் முடிவை மாற்றக்கூடாது. உடன் செயற்படுத்த வேண்டும் என 52 வயதான அந்த விமானி தெரிவித்தார். இவ்விமானி மொத்தமாக 3 200 மணித்தி யாலங்கள் பறப்பில் ஈடுபட்ட அனுபவம் வாய்ந்தவர். இவர் பொழுது போக்காக விமானம் ஓட்டினாலும் இவர் ஒரு இராணுவ வீரராவார். விமானம் தறையிறங்கியதும் பொலிஸாரும் முதலுதவிப் படையினரும் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளனர்.

விபத்துக்கள் இல்லாமையால் அவர்கள் வேலை சுலபமாகியது. இருப்பினும் A89 இன் இரு புறங்களும் கிட்டத்தட்ட இரண்டு மணித்தியாலங்கள் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டு விமானம் அகற்றப்பட்டது.

உங்களுக்கு மார்பகத்தில் பால் குடிக்க ஆசையா? வயது வித்தியாசமின்றி யாரும் குடிக்கலாம்! எப்படி? இப்படி!!! தற்பொழுது அறிமுகமாகியுள்ளது மார்பக வடிவத்தில் பொதியிடப்பட்ட பால். இதன் முக்கிய சிறப்பம்சம், இது இலகுவில் உக்கக்கூடிய சூழலுடன்

# எவரும் குடிக்கலாம்




நட்புடைய பதார்த்தத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது. மார்பகத்தின் மென்மையை தம்மால் உணரக்கூடியதாக இருப்பதாக பயன் பாட்டாளர்கள் கூறுகின்றாரகள். அரை லீற்றர் கொள்ளளவுடைய இது பார்ப்பதற்கு அசல் மாரபகம் போலவே காட்சியளிக்கிறது.

# செல்போனுக்கு வைரஸ்

இன்றைய தகவல் பரிமாற்ற உலகில் கைத்தொலைபேசிகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது. ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு பொழுதும் இயங்கிக்கொண்டு தான் இருக்கின்றன. இப்போதெல்லாம் கைத்தொலைபேசிகளில் அத்தனை வசதிகளையும் உட்புகுத்தி வருகிறார்கள். இவ்வாறு வசதிகள் அதிகரிக்க கையடக்க தொலைபேசிகளுக்கான ஆபத்துக்களும் அதிகரிக்கின்றன. அவ்வாறான ஆபத்துக்களில் ஒன்றுதான் வைரஸ். இவற்றில் இருந்து புதிய வகை தொலைபேசிகளுக்கு (Smart Phone) பாதுகாப்பளிக்க ANTI VIRUS மென்பொருட்கள் உள்ளன.

AVG ANTI VIRUS:- http://www.brothersoft.com/downloads/free-avg-mobile-antivirus.html

KASPERSKY MOBILE SEURITY:- http://www.kaspersky.com/kaspersky_mobile_security



# பியர் குடிக்கும் மான்

சீனாவில் உள்ள ஒரு உல்லாசவிடுதியில் உள்ள ஒரு மான் தண்ணீர் குடிப்பதற்குப் பதிலாக தினமும் போத்தல் போத்தலாக பியர் குடித்து காண்போரை வியப்பில் ஆழ்த்தி வருகின்றது. இந்த விடுதியில் பணியாற்றும் ஒரு நபர் ஒருநாள் தண்ணீருக்குப் பதிலாக மானுக்கு பியர் குடுத்திருக்கிறார் அதுவே இப்போது விபரீதமாக மாறிவிட்டது. அந்த மான் தினந்தோறும் குறைந்தது இரண்டு போத்தல் பியரைக் குடிக்கிறது. அதுதவிர தினமும் வைனும் குடிக்கிறதாம். ஒரு போத்தல் பியரை ஒரு இழுவையிலேயே அது குடித்து முடித்து விடுகிறதாம் . இதனால் இப்போது அந்தப் பணியாளரின் முழு ஊதியமும் மானுக்கு பியரும் வைனும் வாங்கிக் கொடுக்கவே போய்விடுகிறதாம். அந்த மான் பியர் குடித்துவிட்டு போடும் கூத்தை பார்க்கவே தினமும் அங்கு பலர் வருகை தரத் தொடங்கியுள்ளனராம்.

# எரிமலை பாறைகளில் உயிரினம்



உலகில் உயிரினங்களின் தோற்றம் மற்றும் அவற்றின் பரிணாம வளர்ச்சி குறித்து பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. இந்த நிலையில் தற்போது மிதக்கும் எரிமலை பாறைகளிலிருந்து ஆதிகால உயிரினங்கள் தோன்றியிருக்கக் கூடும் என்ற புதிய தகவல் வெளியாகியுள்ளன. இதுகுறித்து லண்டனில் உள்ள ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக பேராசிரியர் மார்ட்டின் பிராசியர் தலைமையிலான குழுவினர் ஆய்வு மேற்கொண்டனர். கடந்த 3,500 கோடி ஆண்டுகளுக்கு முன்பு தண்ணீரில் மிதக்கும் தன்மையுள்ள எரிமலை பாறைகள் உருவாகியிருக்கலாம். அவற்றின் மீது மின்னல் தாக்கியதால் அவை நொருங்கி பலவித ரசாயன மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கலாம். அதில் இருந்து எண்ணை வடிவிலான ஹைட்ரோ கார்பன்கள் மற்றும் உலோகங்கள் உருவாகி அதன் மூலம் உயிரினங்கள் தோன்றி இருக்கக்கூடும் என பேராசிரியர் மார்ட்டின் பிராசியர் தெரிவித்துள்ளார்.

# இணைய இணைப்பு இல்லாமல் ஜிமெயிலை பயன்படுத்த

கூகுளின் ஜிமெயிலை அனைவரும் உபயோகிக்கிறோம் நாளுக்கு நாள் புதுப் புது வசதிகளை அறிமுகப்படுத்துவதால் அனைவரும் ஜிமெயிலை பயன்படுத்துகிறோம். அதில் ஏதாவது ஒரு நேரத்தில் நமக்கு ஏதேனும் முக்கியமான மின்னஞ்சல் வந்துள்ளதா என சோதிக்க வேண்டும் அல்லது யாருக்கேனும் முக்கிமாக ஒரு மின்னஞ்சல் அனுப்ப வேண்டும் சரியாக அந்த நேரம் பார்த்து நம்முடைய கணினியில் இணைய இணைப்பு துண்டிக்கபட்டிருக்கும் அல்லது நாம் வேறு எங்காவது வெளியில் இருப்போம் மடிக்கணினியில் இணைய இணைப்பு இருக்காது. அது போன்ற சமயங்களில் நமக்கு உதவி செய்யவே கூகுள் ஒரு அருமையான வசதியை வெளியிட்டுள்ளது.

ஒப்லைனில் நம்முடைய ஜிமெயிலுக்கு வந்துள்ள மின்னஞ்சலைப் பார்க்கலாம் மற்றும் நாம் மற்றவர்களுக்கும் மின்னஞ்சல் அனுப்பலாம் மற்றும் ஒன்லைனில் செய்யும் அனைத்து வேலைகளையும் நாம் இன்டர்நெட் இணைப்பு இல்லாமலே செய்யலாம். இதற்கு நீங்கள் கூகுள் குரோம் உலவியை பயன்படுத்த வேண்டும். அடுத்து இந்த லிங்கில் Offline Google Mail சென்று நீட்சியை உங்கள் உலவியில் இன்ஸ்டால் செய்யுங்கள்.

இந்த நீட்சியை உங்கள் உலவியில் இணைத்தவுடன் ஒரு புதிய ரப் (tab) உருவாகும் அல்லது நீங்களே ஒரு New tab உருவாக்குங்கள். இப்பொழுது புதிய டேபில் நீங்கள் தற்பொழுது இணைத்த Offline Google Mail ஐகானும் இருக்கும் அதில் கிளிக் செய்யுங்கள். உங்களுக்கு இன்னொரு விண்டோ ஒப்பன் ஆகும் அதில் Allow Offline Mail என்பதை தேர்வு செய்யவும். இந்த விண்டோவில் கீழே பகுதியில் உங்களின் மின்னஞ்சல் Ib காட்டும் அதில் எந்த ஐடிக்கு நீங்கள் ஒவ்லைனில் பார்க்க வேண்டுமோ அதை தேர்வு செய்து கொண்டு Continue பட்டனை அழுத்துங்கள்.

அவ்வளவு தான் Continue அழுத்தியவுடன் உங்களின் மின்னஞ்சல் திறக்கும் அந்த .ஐடிக்கு வந்த அனைத்து மின்னஞ்சல்களும் காட்டும். இதில் உங்கள் இன்பாக்ஸில் உள்ள அனைத்து மின்னஞ்சல்களும் காட்டும். அந்த மின்னஞ்சலுக்கு நீங்கள் Reply போடலாம், அல்லது அந்த மின்னஞ்சலை அப்படியே Forward செய்யலாம் அல்லது புதியதாக நீங்களே ஒரு மின்னஞ்சலை Compose பட்டனை அழுத்தி அனுப்பலாம் மற்றும் ஏதாவது ஒரு பைலை attachment செய்து அனுப்பும் வசதியும் உள்ளது அனைத்தும் இணைய இணைப்பு இல்லாமலே.

மேலும் ஓன்லைனில் உள்ள Move, Label, Mute, Report Spam, Print, Mark as Read போன்ற இதர முக்கியமான வசதிகளும் நீங்கள் ஒவ்லைனில் பயன்படுத்தி கொள்ளுங்கள்.

மேலும் Menu பட்டனை அழுத்தினால் இன்னும் பல வசதிகள் உள்ளது. இதன் மூலம் Chat History கூட பார்த்து கொள்ளலாம் என்பது கூடுதல் சிறப்பு. இவ்வாறு ஒட்டுமொத்த வசதிகளையும் நாம் இணைய இணைப்பு இல்லாமேலே பயன்படுத்திக் கொள்ளலாம்.

கணினி மூலை

## இந்தியச் செய்திகள்

# சொத்துக்கள் குவிப்பு வழக்கில் ஜெயலலிதா ஆஜராக வேண்டும்

## உச்ச நீதிமன்றம் உத்தரவு



(புதுடில்லி)

சொத்துக் குவிப்பு வழக்கில் தமிழக முதல்வர் ஜெயலலிதா நேரில் ஆஜராக வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழக முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கு பெங்களூர் நீதிமன்றில் இடம்பெற்று வருகிறது. இந்த வழக்கில் நேரில் ஆஜராவதிலிருந்து விலக்கு அளிக்க முதல்வர் ஜெயலலிதா சார்பில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் பெங்களூர் உயர நீதிமன்றம் நேரில் ஆஜராக உத்தரவிட்டது.

எனவே, இதனை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது, இதன் மீதான விசாரணை நேற்று நீதிமன்றில் நடந்தது. இதில் குற்றம் சாட்டப்பட்டவர் நீதிமன்றில் ஆஜராவதிலிருந்து விலக்கு அளிக்குமாறு கூறுவது, வழக்கைத் தாமதப்படுத்தும் செயல். எனவே நேரில் ஆஜராக வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவிடப்பட்டுள்ளது.

# தற்போது முதல்வரான பின்னர் சொத்து எதுவும் வாங்கவில்லை

## ஜெயலலிதா

(சென்னை)

தற்போதைய சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றிபெற்று முதல்வராக பதவியேற்ற பின்னர் புதிதாக சொத்து எதுவும் வாங்கவில்லை என முதல்வர் ஜெயலலிதா சட்டப் பேரவையில் தெரிவித்துள்ளார்.

இந்திய தேர்தல் ஆணைய விதி முறைப்படி சட்டமன்ற அல்லது நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் தனது சொத்துக் கணக்கை வெளியிட வேண்டும். அதன்படி நான் ஸ்ரீரங்கம் தொகுதியில் போட்டியிட்டபோது, 5 மாதங்களுக்கு முன்பு அதாவது ஏப்ரல் மாதம் எனது சொத்துக் கணக்கை வெளியிட்டேன்.

ஸ்ரீரங்கத்தில் நான் போட்டியிட்ட போது கொடுத்த விபரத்தின்படி எனது அசையும் சொத்து 13 கோடியே 3 இலடசத்து 77 ஆயிரத்து 929 ரூபாவாகும் அசையாச் சொத்து 38 கோடியே 37 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவாகும். எனது மொத்தச் சொத்தின் மதிப்பு 51 கோடியே 40 இலடசத்து 67 ஆயிரத்து 929 ரூபாவாகும்.

தேர்தல் முடிந்து 3 மாதங்கள் ஆகியிருக்கிறது. அதன் பிறகு நான் இதுவரை எந்தச் சொத்தும் வாங்கவில்லை என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

# சூரிய மண்டலத்தின் 5 கிரகங்களை கண்டுபிடித்த இந்திய மாணவர்கள்

(புதுடில்லி)

சூரிய மண்டலத்தில் உள்ள ஐந்து சிறிய கிரகங்களை, இந்திய மாணவரகள் கண்டுபிடித்துள்ளனர். இது குறிதது, ஸ்பேஸ் அமை ்பின் இயக்குனர் தேவ்கன் கூறியதா து: சர்வதேச வானியல் கூட்டு ஆய்வுத் திட்டம் மற்றும் சர்வதேச ஆராய்ச்சிக் கல்வித் திட்டத்தின் கீழ் நடந்த பயிற்சியில், 60 பாடசாலைகளைச சேர்ந்த மாணவர்கள் பங்கு பற்றினர். தொலைநோக்கியைப் பயன்படுத்தி, வானில் உள்ள கிரகங்களை ஆய்வு செய்யும் பயிற்சி, இவர்களுக்கு அளிக்கப்பட்டது.

இதில், 10 மாணவர்கள் சேர்ந்து ஐந்து கிரகங்களைக் கண்டுபிடித்துள்ளனர். டில்லி பாலபாரதி பாடசாலையைச் சேர்ந்த பிளஸ் 2 மாணவர்கள் வைபவ் சாப்ரா, 'ரன்ஜித் சிங் ஆகியோர், கிரகங்களுக்கு பெயர் சூட்டும் வாய்ப்பினைப் பெற்றுள்ளனர். டில்லியின் ராஜிந்தர் நகரில் உள்ள பாலபாரதி பாடசாலை மாணவியர் பிரக்யா மற்றும் அபராஜிதா ஆகியோர், மிகவும் அபூர்வமாகத்



தென்படக் கூடிய "ட்ரோஜான்" எனப்படும் கிரகங்களைக் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தக் கிரகங்கள், வியாழன் கிரகத்திற்கு அருகே தென்படக்கூடியவை. குர்கானில் உள்ள ரையான் பாடசாலையைச் சேர்ந்த சிந்தன், உமாங் பாட்டியா, கெமிக்கல் இன்ஜினியரிங் மையத்தைச் சேர்ந்த ட்ருஷித் மக்வானா, நவல் கொர்ல்கர்,நேவி சில்ரன் பாடசாலையைச் சேர்ந்த அக்ஷித் மாத்தூர், கார்த்திக் ரஞ்ஜன் ஆகியோர், சிறிய கிரகங்களைக் கண்டுபிடித்த மாணவர்கள் பட்டியலில் உள்ளனர்.

# தாக்குதல் பட்டியலில் சோனியாவின் பெயர்?



(புதுடில்லி)

தீவிரவாதிகளின் தாக்குதல் பட்டியலில் காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி இடம் பெற்றிருந்த தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

சத்தீஷ்கார் மாநிலம் தம்தாரி மாவட்டத்தல் உள்ள காட்டுப் பகுதியில் மத்திய பொலிஸ் படையினர் தீவிரவாதிகளைத் தேடும் பணியில் ஈடுபட்டனர்.

அப்போது அங்கு தீவிரவாதிகளின் முகாம் ஒன்றைக் கண்டுபிடித்தனர். ஆனால் அங்கு யாரும் இல்லை.

அந்த முகாமில் ஏராளமான வெடி பொருட்கள், ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மேலும் அங்கு காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி, காங்கிரஸ் பொதுச்செயலாளர் ராகுல் காந்தி, சத்தீஷ்கார் மாநில முதலமைச்சர் ராமன் சிங், மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் ஆகியோரது படங்கள் கைப்பற்றப்படடன.

எனவே தீவிரவாதிகளின் தாக்குதல் பட்டியலில் இவர்கள் இடம்பெற்று இருக்கலாம் என்று இந்தியப் பொலிஸ் படையினர் தெரிவித்துள்ளனர்.

# ரெட்டி சகோதரர் ஜனார்த்தனன் சி.பி.ஐ.அதிகாரிகளால் கைது

(புதுடில்லி)

கர்நாடக மாநிலத்தில் பெரும் செல்வாக்குக் கொண்ட ரெட்டி சகோதரர்களில ஒருவரான ஜனார்த்தனன் ரெட்டியை சி.பி.ஐ அதிகாரிகள் நேற்றுக் காலையில் கைது செய்துள்ளனர்.

பா.ஜ அரசில் மாநில அமைச்சர்களில் யார் இடம் பெற வேண்டும் என்ற அளவுக்கு அதிகாரம் படைத்த இவர்கள் மீது சுரங்க மோசடி தொடர்பான குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மாநில லோக் ஆயுக்தா வெளியிட்டுள்ள அறிக்கையில் மாநிலத்தில் அரசுக்குச் சொந்தமான சுரங்கம் ஏலம் விடப்பட்டதில் முறைகேடு நடந்திருப்பதாகவும், இதனால் அரசுக்குப் பலநூறு கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்திருந்தது.

மேலும் உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு நிலுவையில் இருந்தது. சுரங்கத்தை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் பணித்திருந்தது. சுரங்கத்தில் இருந்து கனிமத்தை வெட்டி எடுக்கவும் தடை விதித்திருந்தது.

இந்நிலையில் நேற்று அதிகாலை 10 பேர் கொண்ட சி.பி.ஜ அதிகாரிகள் குழுவினர் பெல்லாரியில் உள்ள ஜனார்த்தனன் ரெட்டி வீட்டில் புகுந்து அதிரடிச் சோதனை நடத்தினர்.

தொடர்ந்து ரெட்டியைக் கைது செய்து ஐதராபாத் அழைத்துச் சென்றனர். ரெட்டியன் உறவினரும் ஒபலாபுரம் சுரங்க நிறுவனத்தின் நிர்வாக இயக்குநருமான சீனிவாச ரெட்டியையும் கைது செய்துள்ளனர்.

# மும்பைத் தாக்குதலின் சூத்திரதாரியை நாடுகடத்த இந்தியா விரும்பவில்லை


## நாராயணன் கூறியதாக விக்கிலீக்ஸ் தகவல்



(புதுடில்லி)

மும்பைத் தாக்குதல் சம்பவத்தின் மூளையாகச் செயற்பட்ட டேவிட்கோல்மென் ஹெட்லியை நாடு கடத்திக் கொண்டுவர இந்தியா ஆர்வம் காட்டவில்லை என இந்தியாவுக்கான அமெரிக்க தூதரிடம், முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் கூறியதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. மும்பையில் கடந்த 2008ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதல் சம்பவத்திற்கு மூளையாகச் செயற்பட்டதாக லஷ்கர்-இ-தொய்பா அமைப்பைச் சேர்ந்த டேவிட்கோல்மென் ஹெட்லி மீது அமெரிக்க நீதிமன்றில் வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்து வருகிறது.


இந்நிலையில் சர்ச்சைக்குரிய இணையத்தளமான விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ள பரபரப்புத் தகவலில் கூறியுள்ளதாவது: மும்பைத் தாக்குதலில் லஷ்கர் தொய்பா அமைப்புக்கு உதவியதாக ஹெட்லி மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணை அமெரிக்க நீதிமன்றில் நடந்துவருகிறது. கடந்த 2009ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 17ஆம் திகதி அன்று இது குறித்து இந்தியாவிற்கான அமெரிக்கத் தூதராக இருந்த திமோதி ரோமர், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணனிடம் தெரிவித்தார். அதற்கு, நாராயணன் ஹெட்லியை மும்பைத் தாக்குதல் விவகாரம் தொடர்பாக இந்தியாவிற்கு நாடு கடத்திக் கொண்டுவர ஆர்வமில்லை. இந்த நேரத்தில் ஹெட்லியை நாடு கடத்தி வருவது கடினம். இதனால் பெரும் சிக்கல் ஏற்படும் எனக் கூறினார். இவ்வாறு விக்கீலீக்ஸ் இணையத்தளம் வெளியிட்டுள்ளது.



விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு பிரதிஷ்டை செய்யப்பட்ட விநாயகர் சிலையை சென்னை, காசிமேடு கடற்கரையில் கரைப்பதைக் காணலாம்.

உலகச் செய்திகள்

## ஜப்பானைத்தாக்கியது "டலாஸ்" சூறாவளி 26 பேர் பலி; 43 பேரைக் காணவில்லை



(டோக்கியோ)

ஜப்பானின் இரு தீவுகளை டலாஸ் சூறாவளி தாக்கியதில் 26 பேர் பலியாகியுள்ளதுடன் 43 பேர் காணாமற் போயுள்ளனர்.

இரு மாகாணங்களில் பெய்த கன மழையால் பல இடங்களில் நிலச்சரிவு மற்றும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

ஜப்பானின் ஷிகோகு தீவு மற்றும் பிரதான ஹோன் தீவு ஆகியவற்றை 'டலாஸ்' சூறாவளி தாக்கியது. இதில் வகாயாமா மற்றும் நரா என்ற இரு மாகாணங்கள் பெருமளவில் பாதிக்கப் பட்டன. சூறாவளி தாக்கும் என எச்சரிக்கை விடப்பட்டதால் ஐந்து இலட்சம் மக்கள் தங்கள் வீடுகளில் இருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லும்படி அறிவுறுத்தப்பட் டனர்.

வகாயாமா மற்றும் நரா மாகாணங்களில் பல இடங்களில் கன மழை காரணமாக நிலச்சரிவும், வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டன. ஜப்பானைக் கடந்து கிழக்கு ஜப்பான் கடலை நோக்கி டலாஸ் செல்லும் என வானிலை மையம் தெரிவித்துள்ளது. எனினும் கன மழையும் அதனால் நிலச்சரிவும் ஏற்பட லாம் என்றும் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

# கடாபியின் ஆதரவு நகரம் மூன்று முனைகளில் முற்றுகை

## பெருமளவு பழங்குடியினர் சரணடையும் வாய்ப்பு

(திரிபோலி)

லிபிய முன்னாள் தலைவர் கடாபியின் ஆதரவாளர்கள் குவிந்துள்ள பானி வாலித் நகரை மூன்று திசைகளில் இருந்தும் எதிர்ப்பாளர்கள் முற்றுகையிட் டுள்ளனர்.

அந்நகரில் உள்ள பழங்குடி இனம் எதிர்ப்பாளர்களுடன் சேர்வது குறித்து பிளவுபட்டுள்ள தால் விரைவில் அந்நகர் சரணடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

லிபிய தலைநகர் திரிபோலியில் இருந்து தென்கிழக்கில் 150 கி.மீ தொலைவில் அமைந்துள்ள பானி வாலித நகரில் "வர்பாலா" என்ற பழங்குடியினர் அதிகளவில் உள்ளனர்.

லிபியாவில் உள்ள 100 இற்கும் மேற்பட்ட பழங்குடியினங்களில் "வர்பாலா" இனம் தான் தொகையில் பெரியது. இந்நகரின் மூன்று புறங்களில் இருந்தும் நகருக்குச் செல்லும் வழிகளை எதிர்ப்பாளர்கள் தடுத்துள்ளனர்.

இதனால் பானி வாலித்துக்கும் வெளியுலகுக்குமான தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. இந்நகரில் தான் கடாபியும் அவரது மகன் சயீப் அல் இஸ்லாம், முட்டாசிம் ஆகியோர் இருப்பதாக நம்பப்படுகிறது.

பானி வாலித் நகரில் உள்ள வர் பாலா இனத்தவருக்குள் எதிர்ப்பாளர்களுடன் சேர்வது குறித்து கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளதாக எதிர்ப்பாளர்களின் இராணுவ செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

அதனால் அதிக போராட்டம் இல்லாமல் பேச்சு மூலம் விரைவில் அந்நகரம் தங்கள் வசம் வந்து விடும் என எதிர்ப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம் அந்நகரில் உள்ள மக்களில் 80 சதவீமான பேர் கடாபிக்கு எதிராகத் திரும்பியுள்ளதாகவும் தக வல்கள் தெரிவிக்கின்றன. தேவைப்பட்டால் போர் மூலம் நகரைக் கைப்பற்றவும் எதிர்ப்பாளர்கள் தயாராக உள்ளனர்.



சாலமன் தீவின் தலைநகர் ஹொனியாரவிற்குச் சென்ற ஐ.நா. பொதுச் செயலரை அந்நாட்டுப் பிரதமர் டேனி பிலிப் அந்நாட்டுப் பாரம்பரிய முறைப்படிய வரவேற்பதைக் காணலாம்.

# செப். 11 இல் சிறிய விமானங்கள் மீது அல்கொய்தா தாக்குதல் நடத்தலாம்

## அமெரிக்க உள்துறை அமைச்சு எச்சரிக்கை

(வொஷிங்டன்)

அமெரிக்காவின் நியூயோர்க் நகரின் இரட்டைக் கோபுர தகர்ப்பின் 10 ஆவது ஆண்டு நினைவு நாளை ஒட்டி சிறு ரக விமானங்கள் மீது அல்கொய்தா தாக்குதல் நடத்தலாம் என அந்நாட்டு உள்துறை அமைச்சகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நியூயோர்க் நகரின் இரட்டைக் கோபுரங்கள் 2001 செப்ரெம்பர் 11 இல் அல் கொய்தா பயங்கரவாதிகளால் தகர்க்கப்பட்டது. அதன் 10 ஆவது ஆண்டு நினைவு நாள் வரும் 11 ஆம் திகதி அமெரிக்கா முழுவதும் அனு சரிக்கப்படுகிறது.

இதையொட்டி வெளிநாடுகளில் பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக் கர்கள் கவனத்துடன் இருக்கும்படி அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் எச்சரிக்கை விடுத் திருந்தது.

இதையடுத்து நாட்டின் உள்பகுதியில் இயங்கி வரும் சிறு ரக விமானங்கள் மீது அல்கொய்தா தாக்குதல் நடத்தலாம் என உள்துறை அமைச்சகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# பதிவிறக்கப் பெட்டகம்

ஒவ்வொரு மனிதனும் தனித்துவமிக்கவன். அவனது மன அமைப்பும் சிருஷ்டியின் இரகசியமும் தனித்துவமானவை. இதனால் ஒவ்வொரு மனிதனின் கதையும் அறியப்பட வேண்டியுள்ளது.

– ஹெர்மன் ஹெஸ்ஸே

உலகம் புத்தகமாவதற்காகவே இருக்கிறது.

– மல்லார்மே

நாவல்களை வாசிப்பதன் வழியேதான் மக்கள் பல்வேறு விதமான குணங்களையும் தனித்துவங்களையும் கொண்ட மனிதர்களைப் பரிச்சயம் கொள்கிறார்கள். ஒருவேளை இந்த உலகில் நாவல்களே இல்லாமல் போயிருந்தால் இத்தனை வேறுபட்ட மனிதர்களை அறிந்துகொள்ளும் வாய்ப்பு முற்றிலும் இல்லாமல் போயிருக்கும். நாவல் என்பது ஒரு ஆவணக் காப்பகம் போன்றது. அது வாழ்வின் பல நுண்மையான விபரங்களைச் சேகரித்து பாதுகாத்து வைக்கிறது. ஆகவே ஒவ்வொரு நாவலும் நூற்றுக்கணக்கான மனிதர்களைப் பற்றிய உளவியல் குறிப்புகளே.

– டோரிஸ் லெசிங்

என்னளவில் இலக்கியம் ஒரு மருந்து. நாவலொன்றில் அடர்ந்த ஆழமான பகுதியொன்றை வாசிப்பது, அதனுலகில் நுழைந்து அது உண்மையானதொரு உலகம் என நம்புவது – இதைவிடவும் என்னை மகிழ்ச்சிக்குள்ளாக்கும், வாழ்வோடு பிணைக்கும் விஷயம் வேறொன்று இல்லை.

– ஓரன் பாமுக்

ஒரு ஆசானைப் போல டால்ஸ்டாயிடமிருந்து நிறைய கற்றுக் கொண்டிருக்கிறேன். பல நேரங்களில் அவரது கை என் தோளில், முதுகில் தொட்டு சாந்தம் தருவதையும் சில நேரங்களில் அவர் என்னை இறுக்கி அனைத்து கண்ணீர் விடுவது போலவும் உணர்ந்திருக்கிறேன். இரகசியம் என்று மனதில் ஒளிந்து கிடந்த வடுக்கள் வேதனைகள் அத்தனையும் அவர் முன்னே மலரத் தொடங்கி விடுகின்றன. சில நேரங்களில் காற்றில் உதிர்ந்து அலையும் இலை போல அவர் இலக்கற்று நம்மைப் பார்க்கச் செய்கிறார். சில நேரங்களில் மரத்தை தரையில் வீழ்த்தும் நிழலைப் போல நம் கடந்த காலத்தை காலடியில் வீழ்த்திக் காட்டுகிறார். பனிப்பாறைகள் ஏதோ ஒரு நாளில் தானே உடைந்து வெள்ளப் பெருக்கெடுப்பது போல நமக்குள் உறைந்துபோன அந்தரங்கத்தின் வெளிப்படுத்தப்படாத தருணங்கள் டால்ஸ்டாயின் ஆவேசத்தின் முன்பாக உடைந்து சிதறுகின்றன.

– எஸ். ராமகிருஷ்ணன்

ஒவ்வொரு மனிதனும் டொஸ்ரோயெவ்ஸ்கியைப் படித்தால் உலகம் இன்னும் சற்று வாழத் தகுந்த இடமாக மாறிவிடும். அதில் சந்தேகம் இல்லை.

– சாரு நிவேதிதா

"Dostoevsky gives me more than any scientist, more than Gauss."

– அல்பேட் ஐன்ஸ்டீன்

வாழ்க்கையில் ஏற்பட்ட சூன்யத்தை புத்தகங்களால் நிரப்புகிறேன்.

– அவள் ஒரு தொடர்கதை படத்தில்.

ஷேக்ஸ்பியருடைய கையைப் பிடித்துக்கொண்டு, "இறைவனுடைய வேவுகாரனைப் போல், நானும் மனித உலகத்தைச் சுற்றி வந்தேன்! மக்களுடைய சிந்தனைகளையும், உணர்ச்சிகளையும், செயல்களையும் சுண்டிப் பார்த்து அனுபவித்தேன்.

– எஸ். மகராஜன்

சொர்க்கம் என்பது ஒரு மாபெரும் நூலகம் என்றே நான் எப்போதும் கற்பனை செய்துகொண்டிருக்கிறேன்.

– ஜோர்ஜ் லூயி போர்ஹே

நூல்நிலையங்கள் அன்னையர்கள், பால்நினைந்தூட்டும் கருணைகள்.

– ஜெயமோகன்

நூலகம் ஒரு மாயக்கூடம். அங்கு பலவகை வசீகர ஆவிகள் உலவுகின்றன.

– எமர்சன்

எழுத்தாளர்களைத் தண்டித்தல், எழுதவிடாமல் அடக்குதல், தணிக்கைமுறை, நூல்களை எரித்தல் போன்றன எல்லாம் குற்றங்கள்தான். இந்த அநீதிகளை நாம் கண்டிக்க முடிகிறது. ஆனால் இதையெல்லாம் விட மோசமான குற்றமான புத்தகங்களைப் படிக்காமை என்று வரும்போது நாம் அதிகாரமின்றி நிற்கிறோம். வாசிப்பு என்பதை அலட்சியப்படுத்துவதே மனித வாழ்வைச் சிதைவுறச் செய்யும் குற்றமாக உள்ளது. அந்தக் குற்றத்திற்கு ஒருவன் தன் வாழ்வையே விலையாகக் கொடுக்கிறான். அதுவே ஒரு சமூகமாக இருந்தால் தன் வரலாற்றையே விலையாகக் கொடுக்கிறது.

– ஜோசஃப் பிராட்ஸ்கி

# யதார்த்தமான மதிப்பீடு தமிழர் அரசியலில் தேவை

முள்ளிவாய்க்காலின் பின்னரான தமிழ் அரசியல் தொடர்பில் தற்போது நடைபெற்று வருகின்ற கருத்து ஊடாட்டமானது மீளவும் 'சுயாதீனம்', 'எமக்கான அரசியல்' மற்றும் வெளிநாட்டு சக்திகளின் நிகழ்ச்சி நிரல் போன்ற விடயங்களையே சுற்றி நிற்கின்றது.

இருபதாம் நூற்றாண்டில் நடைபெற்ற எந்த ஒரு புரட்சியோ அல்லது தேசிய விடுதலைப் போராட்டமோ சுயாதீனமாக நின்று வென்ற வரலாறு இல்லை, போல்ஷெவிக் புரட்சி முதல் அண்மைக்கால கொசோவோ, தென் சூடான் வரை ஏதோ ஒரு வகையில் வேற்று நாட்டு ஆதரவுடன் பல சந்தர்ப்பங்களில் அவர்களின் நிகழ்ச்சி நிரலுக்கு ஊடாகவே, பல புரட்சிகள் மற்றும் தேசிய விடுதலைப் போராட்டங்கள் வெற்றி பெற்றன.

சர்வதேச அரசியலில் மனிதநேயத்துக்காக மட்டுமே போர்கள் நடைபெற்றது கிடையாது. இனிமேலும் நடைபெறப் போவதில்லை.

எனவே தான் 'சுயாதீனம்' மற்றும் 'எமக்கான அரசியல்' கோஷங்கள் தொடர்பில் ஒரு யதார்த்தமான மதிப்பீட்டிற்கு தமிழர் அரசியல் வரவேண்டிய தேவையுள்ளது. ஏனெனில் மேற்கூறிய விடயங்கள் எப்போதுமே சார்பு நிலைப்பட்டவை (relativity). அமெரிக்காவின் ஜனநாயகக் கட்சி, குடியரசுக் கட்சி முதல் சுவீடனின் Pirate Party வரை சகல அரசியல் அமைப்புக்களும் தம்மைச் சுற்றி நிகழும் மாற்றங்களுக்கு ஏற்ப தமது கொள்கைகளை உருவாக்கிக் கொள்கின்றன. அவ்வாறான சிந்தனை-கலாசாரம் இல்லாவிடின் எந்த ஒரு அரசியல் அமைப்பும், அதற்கான முள்ளிவாய்க்காலை எதிர்கொள்ள நேரிடும்.

மேற்கூறிய விடயங்கள் ஒன்றும் பெரிய அரசியல் தத்துவங்களோ அல்லது சிக்கலான கொள்கைகளோ அல்ல, மாறாக மனித இனத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ள பகுத்தறிவின் மிகவும் அடிப்படையான குணாம்சமாகும். இந்த வகையில், தமிழர் அரசியலானது பகுத்தறிவை கைவிட்டு எமக்கான அரசியல் என்ற மாயமானை நோக்கி ஓடிச்செல்வது, சட்டியிலிருந்து அடுப்புக்குள் விழுந்த கதையாக தான் அமையும்.

ஒரு விடயதானம் தொடர்பில் அதற்கான வெவ்வேறு கற்பிதங்களை ஒவ்வொருவரும் கொண்டிருப்பர், இது ஒருவர் விடயதானங்களை அறிந்து கொள்வதற்கான வசதி வாய்ப்புக்களைக் கொண்டு வேறுபடும். அந்த வகையில் தமிழீழ தனியரசானது, நடைமுறையில் உருவாக்கப்படும் ஒரு சூழலில், அது எவ்வாறாக உருவாக்கப்படும் அல்லது நிகழ்ச்சி ஒழுங்கு எவ்வாறு இருக்கும் என்று அறிவதில் இந்த கட்டுரையாளருக்கு எப்போதுமே ஒரு ஆர்வம் இருந்து வந்துள்ளது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக விடுதலைப் புலிகள் முதல் எந்த ஒரு அரசியல் விற்பன்னருமே, தமிழீழம் உருவாக்கப்படும் இறுதிக்கட்ட நாட்கள், நிமிடங்கள் எவ்வாறு இருக்கும் என்று ஒரு சிறிய விபரிப்பைக் கூட செய்தது கிடையாது.

தமிழீழ உருவாக்கம் என்பது நடைமுறையில் நிகழும்போது பின்வரும் அடிப்படையான விடயங்கள் நிகழ வேண்டும்.

ஏறத்தாழ 18 மில்லியன் சிங்கள மக்களைக் கொண்ட இலங்கை அரசுடன், ஏறத்தாழ 2 மில்லியன் மக்களைக் கொண்ட தமிழீழம் ஆனது, நிரந்தரமான ஒரு போரில் ஈடுபடவேண்டியிருக்கும்.

தமிழீழம் ஆனது சுமார் எழுநூறு கிலோமீற்றர் தூரமான தரைவழி எல்லையையும் இலங்கைத் தீவின் மூன்றில் இரண்டு பங்கு கரையோர எல்லையையும் பாதுகாக்க வேண்டியிருக்கும்.

தமிழீழ உருவாக்கத்திற்கு மேலும் பல காரணிகள் அவசியமாயினும், கால-வெளியில் தமிழீழத்தின் பௌதிக புவியியல் வரையறுப்பு எனும் நிகழ்வில் மேற்கூறிய இரண்டு விடயங்களும் நேரடியாகத் தாக்கம் செலுத்தும் விடயங்களாகும்.

சராசரியான நுண்ணறிவுள்ள, மிக சராசரியான உலக அரசியல் அறிவுள்ள எவரும் ஒரு முடிவுக்கு வருவார்கள். அதாவது 'சுயாதீனமான' மற்றும் 'எமக்கான அரசியல்' போன்ற வெற்றுக் கோஷங்களினால் இது நடைமுறைச் சாத்தியப்படாது என்பதே.

இலங்கைத் தீவில் தமிழீழம் உருவாகுவதற்கான மிக அடிப்படையான தேவை ஒன்றுள்ளது: அதுதான் வெளிநாட்டு சப்பாத்துக்கள் (foreign boots on the ground) இலங்கைத் தீவில் பதிய வேண்டும் என்ற யதார்த்தமாகும். அதாவது வேற்று நாட்டுப் படைப்பலப் பிரயோகம் இன்றி தமிழீழம் என்பது சாத்தியப்படாது. அது மாத்திரமின்றி, வேற்று நாட்டுப் படையானது, ஒரு நீண்டகால ஆக்கிரமிப்புப் படையாக இலங்கைத் தீவில் நிலைகொள்ள வேண்டியிருக்கும். சுமார் 18 மில்லியன் சனத்தொகை கொண்ட இலங்கையிடமிருந்து 2 மில்லியன் சனத்தொகை கொண்ட புதிய நாடான தமிழீழத்தை பாதுகாப்பதற்குரிய செலவீனம் மிகப் பெரிய தொகையாக இருக்கும்.

நடைமுறையில் இதற்குரிய நெருங்கிய உதாரணமாக, அரபு நாடுகளுக்கு மத்தியில் உள்ள சிறிய மக்கள் தொகையைக் கொண்ட இஸ்ரேலைக் காணலாம். இஸ்ரேலின் இருப்பிற்காக அமெரிக்காவானது வருடாந்தம்

## அநபாயன்

மூன்று பில்லியன் டொலர்களை செலவளிக்கின்றது. அமெரிக்காவின் இந்தச் செலவுக்கு ஏற்ற பிரதிபலன் வருகின்றதா என்ற வாதப்பிரதி வாதங்கள் மத்தியில் அமெரிக்காவின் ஆதரவு தொடர்ந்த வண்ணமேயுள்ளது. தற்போதைய சிக்கலான மத்திய கிழக்கு அரசியல் பின்னணியில், மூடிய அறைக்குள் அமெரிக்க கொள்கை வகுப்பாளர்கள், முன்னை நாள் அமெரிக்க ஜனாதிபதி ஹரி ட்ருமன், ஏன் இஸ்ரேலை அங்கீகரித்தார் என்று தமக்குள்ளே ஆதங்கப்பட்டுக் கொள்ளலாம். ஆனால் தற்போதைய சூழலில் இஸ்ரேலைப் பாதுகாப்பதைத் தவிர அமெரிக்காவிற்கு வேறு கொள்கைத் தெரிவு இல்லை.

எனவே தான் தமிழீழத்தின் இருப்புக்கு மேற்கூறியது போன்ற தொடர்ச்சியான ஒரு வேற்று நாட்டு ஆதரவு அவசியமாகின்றது.

இந்த வகையில் தமிழீழத்தை உருவாக்கி அதன் பாதுகாப்பு உத்தரவாதத்தை உறுதிப்படுத்துகின்ற வேற்று நாட்டிற்கு கிடைக்கும் பிரதிபலன் என்ன என்றால், எதுவுமே இல்லை என்பதே யதார்த்தமாகும்.

திருகோணமலை இயற்கைத் துறைமுகம், இந்து சமுத்திரக் கடல் வழிப் போக்குவரத்து மற்றும் மன்னார் வளைகுடா எண்ணெய் அகழ்வு என்று புளுகுக் கதை பேசுவதில் அர்த்தமில்லை. உலகிலேயே மிகவும் சக்தி வாய்ந்த அரசு சாராத கடற்படையைக் கொண்டிருந்த விடுதலைப் புலிகள் காலத்திலேயே, இந்து சமுத்திரக் கடல் வழிப் போக்குவரத்து எந்தவித தடங்கலும் இன்றி நடைபெற்றது. தற்போது போருக்குப் பின்னரான இலங்கைத் தீவின் தேசிய இனப்பிரச்சினையில் மூக்கை நுழைத்துத்தான் சர்வதேசத்திற்கு இந்து சமுத்திர கடல் வழிப் போக்குவரத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்று கூறுபவர்கள், நகைச்சுவை செய்வதாகவே கருத முடியும்.

குறிப்பாக அமெரிக்காவிற்கு இலங்கை தீவில் குறிப்பிட்டுச் சொல்லும்படியான அரசியல், இராணுவ மூலோபாய நலன்கள் கிடையாது. ஒரு கிராம தலையாரிக்கு, கிராமத்திலுள்ள ஒவ்வொரு குச்சு ஒழுங்கையிலும் உள்ள ஈடுபாட்டுக்கு ஒத்தளவான ஈடுபாடே அமெரிக்காவிற்கு இலங்கைத் தீவிலும் உண்டு. நோம் சொம்ஸ்கியை வாசித்து விட்டு conspiracy theory எழுதுபவர்கள், இந்து சமுத்திரம், முத்து மாலை என்று தொடர்ந்து கதையளந்து கொண்டிருப்பார்கள், யாருக்கும் எந்தப் பயனும் இன்றி.

எந்த விதமான பிரதிபலனும் இன்றி மனிதாபிமான நோக்கில் தமிழ் இன அழிப்பை (genocide) நிறுத்தும் பொருட்டு வேற்று நாட்டுத் தலையீடு வரும் என்று இன்னுமொரு கோஷ்டி, டிவிட்டரில் தமிழீழம் காணப் புறப்பட்டுள்ளனர். இன அழிப்புக்கு உள்ளாகும் தேசிய இனங்களுக்கு எல்லாம் தனி நாடு தான் தீர்வு என்றால், ஐக்கிய நாடுகள் சபையில் கிழமைக்கு ஒரு நாடு புதிதாகச் சேர வேண்டிவரும்.

இலங்கைத் தீவில் இராணுவ ரீதியாக தலையீடு செய்ய விரும்பும் வேற்று நாடு ஒன்றுக்கு உள்ள மிக முக்கியமான சவால், முற்று முழுதாக கடலால் சூழப்பட்ட ஒரு தீவில், 18 மில்லியன் சனத்தொகை கொண்ட ஒரு நாட்டையும் 2 மில்லியன் சனத்தொகை கொண்ட ஒரு நாட்டையும், அருகருகே உருவாக்குவதன் அசாத்தியப்பாடு ஆகும்.

ஆனால் தமிழ் பொதுப்பரப்பில் அமெரிக்காவிற்கோ அல்லது இந்தியாவிற்கோ, இலங்கைத்தீவில் தமிழீழம் உருவாக்கப்படுவதில் விருப்பமில்லை என்று பொதுவாகக் கூறப்பட்டாலும், அதற்கான காரணம் அமெரிக்காவிலோ அல்லது இந்தியாவிலோ இல்லை. மாறாக இலங்கைத் தீவிலுள்ள மேற்கூறிய சனத்தொகை வேறுபாடு காரணமாக உள்ள அசாத்தியப்பாடே காரணம் என்பதை பேசுவதில்லை.

தமிழீழம் உருவாகினால் அது இந்தியாவின் காவலனாக இருக்கும் என்று எம்மவர்கள் திரும்பத் திரும்ப கூறினாலும், இந்தியாவானது 18 மில்லியன் சிங்களவர்களைக் கொண்ட இலங்கையை நிரந்தரப் பகை நாடாக மாற்றத் தயாரில்லை. தமிழீழம் உருவான பின்னர், இலங்கைக்கு இழப்பதற்கு வேறு ஒன்றும் இல்லை என்ற சூழலில், சார்பு ரீதியில் அமைதியான, இந்தியாவின் தென் மாநிலங்களில், பாகிஸ்தான் குழப்பம் விளைவிப்பதற்கு இலங்கை எந்த வித தயக்கமும் இன்றி உதவும் என்றும் இந்தியாவின் கொள்கை வகுப்பாளர்களுக்கு நன்றாகவே தெரியும்.

எனவேதான் தர்க்க ரீதியாக நோக்கின் இலங்கைத் தீவில் தமிழீழம் உருவாகுவதற்கான மிக அடிப்படையான நிபந்தனை ஒன்று பூர்த்தி செய்யப்படவேண்டியுள்ளது (இவ்வாறு நிகழ வேண்டும் என்று இந்த கட்டுரையாளரின் விருப்பம் அல்ல!). அதாவது சிங்கள தேசம் இலகுவில் மீள முடியாத வண்ணம் ஒரு பாரிய தாக்குதலுக்கு உள்ளாக வேண்டும், சிங்கள மக்களின் உளவுரண் சாய்க்கப்பட்டு அவர்கள் குறைந்தது சில பத்தாண்டுகளுக்காவது அதிர்ச்சியில் இருந்து மீள முடியாத ஒரு தாக்குதலாக அத்தாக்குதல் அமைய வேண்டும். இது ஒரு சிறிய ரக அணுகுண்டு தாக்குதல் மூலமே இது சாத்தியப்படும். ஏனெனில் பாரம்பரியமான விமானக் குண்டு வீச்சுக்களோ அல்லது குரூஸ் ஏவுகணைத் தாக்குதலோ மேற்கூறிய நோக்கங்களை நிறைவேற்றக் கூடியவை அல்ல.

அத்துடன் நீண்ட கால வேற்று நாட்டு படைப் பிரசன்னம் அவசியமாகின்றது. மேலேயுள்ள பந்தியில் கூறப்பட்டது கிட்டத்தட்ட Star Wars, Harry Potter திரைப்படக் கதைகளில் உள்ள யதார்த்தத்துக்கு இணையான ஒரு கற்பனையாகவே இதனைக் கருதலாம்.

இத்தகைய பின்னணியில் விடுதலைப் புலிகளும் அதன் தலைமையும் இந்த யதார்த்தத்தை தெரியாதவர்களாக இருக்கவில்லை. மாறாக இந்த யதார்த்தம் தொடர்பில் கேள்வி கேட்பது குற்றமாக, துரோகமாகப் பார்க்கப்பட்டது.

அதாவது தமிழர் தரப்பில் தமிழீழக் கோரிக்கைக்கான அடிப்படை என்னவென்று பார்த்தால், இது சிங்கள, பௌத்த இனவாதத்திற்கு எதிரான தமிழரின் இறுதி ஆயுதம் ஆகும், அத்துடன் இந்த ஆயுதப் பயன்பாடு என்பது சிங்களவரை ஒரு நீதியான தீர்வுக்கு இணங்க வைப்பதற்கான ஒரு உளவியல் ஆயுதமாகவே பயன்படுத்தப்பட்டது. பெரும்பாலானோருக்கு தமிழீழக் கோரிக்கை என்பது வெறுமனே உளவியல் ஆயுதம் என்ற உண்மை உறைக்கவில்லை.

அத்துடன் அந்த உண்மையைத் தெரிந்தவர்களில் ஒரு பகுதியினர் இதனை வெளிப்படையாகப் பேசத் தயாரில்லை இன்னொரு பகுதியினர் பேச அனுமதிக்கப்படவில்லை.

இன்னொரு வகையில் கூறுவதானால் தமிழீழக் கோரிக்கை என்பது, சிங்கள-தமிழ் இனக்குழும போராட்டத்தில் தமிழர்கள் தார்மீக ரீதியாக, அறிவியல் ரீதியாக பலமான நிலையிலிருந்தும் தமிழர் தரப்பின் அமைப்பியல் ரீதியான (structural) பலவீனத்தை மறைப்பதற்காக ஈழத் தமிழர்கள் தம்மையும் அறியாமல் போர்த்துக்கொண்ட ஒரு புலித்தோல் ஆகும்.

★ ★ ★ ★

நன்றி : பொங்குதமிழ்

# மேலும் 1500 முன்னாள் புலிகள் மாத இறுதியில் விடுதலை



மாத இறுதியில் 1500 பேர் கொண்ட மேலும் ஒரு தொகுதி முன்னாள் புலி உறுப்பினர்கள் விடுவிக்கப்படவுள்ளனர்.

தற்போது புனர்வாழ்வு பெற்று வரும் 1500 க்கும் மேற்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்படவுள்ளனர்.

தற்போது 100 முன்னாள் புலி பெண் போராளிகள் உட்பட 2700 முன்னாள் புலி உறுப்பினர்கள் மட்டுமே புனர்வாழ்வு நிலையங்களில் மீதமாக உள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

கடந்த யுத்தகாலங்களில் 11951 ஆண், பெண் புலி உறுப்பினர்கள் இராணுவத்தினரால் மீட்கப்பட்டு 24 புனர்வாழ்வு நிலையங்களினூடாக புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கபபட்டவண்ணம் உள்ளனர்.

இதற்கமைய தற்போது 2700 முன்னாள் புலி உறுப்பினர்கள் மட்டுமே புனர்வாழ்வு நிலையங்களில் மீதமாக உள்ளனர். இவர்களும் விரைவில் புனர்வாழ்வு செயற்பாடுகள் பூர்த்தியாக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்படவுள்ளனர்.

தற்போது கிழக்கில் 2 புனர்வாழ்வு நிலையங்களும் வவுனியாவில் 4 நிலையங்களும் யாழ்ப்பாணத்தில் ஒரு நிலையமும் மட்டுமே இன்னும் புனர்வாழ்வு செயற்பாடுகளுக்கென இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### அகன்றது அச்சம்...

இதேவேளை அப்பிரதேசத்தில் நிலைகொண்டிருக்கும் இராணுவ உயர் அதிகாரிகளையும் அழைத்து மக்களிடம் சிநேகபூர்வமானமுறையில் நடந்துகொள்ளுமாறு கேட்டுக்கொண்டதுடன் ஏதேனும் பிரச்சினை இருப்பின் தன்னுடன் தொடர்புகொள்ளுமாறும் கேட்டுககொண்டார்.

இந்நிகழ்வில் யாழ். மாநகரசபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா, நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார் உட்பட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். இதேபோன்று நேற்று முன்தினம் குருநகர்ப் பகுதிக்கும் அமைச்சர் விஜயம் செய்து அப்பகுதியில் பொதுமக்களின் பாதுகாப்புப் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார். அமைச்சரின் இந்த விஜயத்தைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் அச்சம் அகன்று புதுத்தென்புடன் காணப்பட்டனர்.

### பீதியை அகற்ற...

யாழ். பொலிஸார் ஒழுங்கு செய்திருந்த பொதுமக்கள் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் நீல் தளுவத்த இந்தத் தகவலைத தெரிவித்துள்ளார்.

இச் சிவில் பாதுகாப்புக் குழுககளின் மாவட்டமட்டத் தலைவராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா செயற்படுவதுடன் பிரதேச செயலர்கள் இக்குழுவின் அமைப்பாளராகவும் பொலிஸ் நிலையத் தலைமை அதிகாரி செயலாளராகவும் கடமையாற்றவுள்ளனர். மற்றைய அங்கத்தவர்களாக நகரசபைத் தலைவர் பிரதேச சபைத் தலைவர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், இலங்கைப் போக்குவரத்துச் சபைத் தலைவர், தனியார் பஸ் சங்கத் தலைவர், சமுர்த்தி உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர், சுகாதாரத் திணைக்கள அதிகாரி, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் அரச சார்பற்ற நிறுவன அதிகாரி, ஆட்டோச் சங்கம், வர்ததக சங்கம், மின்சார சபை பொறியியலாளர் உள்ளிட்ட அமைப்புக்களின் உறுபபினர்களும் உள்ளடங்குகின்றனர்.

இக்குழுவானது மாதத்தில் ஒரு தடவை கூடி அந்த அந்தப் பகுதிகளில் நிலவும் பொதுமக்களது, பாதுகாப்புப் பிரச்சினை, சமூகப் பிரச்சினை, சிறுவர் துஷ்பிரயோகம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு உடனடித்தீர்வு காணப்படவுள்ளது.

யாழ். பொலிஸ் நிலையத் தலைமை அதிகாரி சமன் சிகேரா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவில் பத்ம தேவா, யாழ். மாநகர முதல்வர் மற்றும் சர்வ மதத்தலைவர்கள் உள்ளிட்டவர்கள் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாண சமூக அமைப்புக்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டனர். மேலும் இந்நிகழ்வில் சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர்களுக்கான அடையாள அட்டை மற்றும் மேலங்கி என்பனவும் பொலிஸாரினால் காண்பிக்கப்பட்டது. (பா)

### யுத்த களத்தில்...

விடுதலைப் புலிகளுக்கு எதிராக வெற்றியை அறிவிப்பதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அமெரிக்க தூதரக பொறுப்பதிகாரி ஜேம்ஸ் ஆர்முவர், அந்தப் படங்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் அவ்வேளையில் வெளியுறவுச் செயலராக இருந்த பாலித கொஹொனவுக்கும் காண்பித்துள்ளதாக விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது.

சிவில் மக்களுக்கான பாதுகாப்பு வலயத்தில் ஆட்லெறித் தாககுதல் ஏற்படுத்திய சேதங்களைக் காட்டும் விதத்தில் ஏப்ரல் 26 மற்றும் 28 ஆம் திகதிகளில் எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் சட்டலைட் படங்களை வெளியுறவு அமைச்சராக இருந்த ரோகித்த போகொல்லாகம விடமும் அமெரிக்க தூதரக பொறுப்பதிகாரி காண்பித்ததாகவும் கூறியுள்ளார். ஜனவரி 2009 இலிருந்து ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லபட்டுள்ளதாக கூறும் உத்தியோக பூர்வமற்ற ஐ.நா. புள்ளி விபரங்களையும் அமெரிக்க தூதரக அதிகாரி அமைச்சரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்போது, எங்கிருந்து யாரால் ஷெல் தாக்குதல்கள் நடததப்பட்டன என்பதை உறுதிப்படுத்தும் தகவல்களை சட்டலைட் படங்கள் காண்பிக்காது என்று ரோகித்த போகொல்லாகம கூறியுள்ளார்.

இலங்கையின் யுத்தகளத்தில் என்ன நிலமை என்று இந்தியாவும் சட்டலைட் மூலம் அவதானித்துக் கொண்டிருப்பதாக ஜனாதிபதி கூறியுள்ளார் என்றும் தாங்களும் கண்காணித்துக் கொண்டுதான் இருக்கிறோம் என்பது இலங்கை அரசுக்குப் புரிந்திருக்கும் என்றும் அமெரிக்க தூதரக அதிகாரி வெள்ளை மாளிகைக்கும் அமெரிக்க வெளியுறவு அமைச்சுக்கும் அனுப்பிய இராஜங்கத் தகவல் பரிமாற்றத்தில் கூறியிருப்பதாக விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது.

## நடராசாவுக்கு இறுதி அஞ்சலி

ஈ.பி.டி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மதனராசா அவர்களின் தந்தையார் அமரர் வடிவேலு நடராசா (ஜே.பி) கடந்த சனிக்கிழமையன்று காலமானார். இவர் பருத்தியடைப்பு ஊர்காவற்துறையை சேர்ந்தவராவர். பூதவுடலுக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்), ஊர்காவற்துறை பிரதேச சபைத் தலைவர் ஜெயகாந்தன் (காந்தன்) உட்பட ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

### பீதியைத் தணிக்கும்...

நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார், நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்), முப்படை அதிகாரிகள், பொலிஸ் உயரதிகாரிகள் யாழ் மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்கள் மதப் பெரியார்கள், சமூகப் பெரியார்கள், புத்திஜீவிகள், கல்விமான்கள் மற்றும் சமூ கத்தின் அனைத்துத் துறைசார்ந்த பிரதிநிதிகளும் கலந்துகொள்கின்றனர். (26)

### யாழ். விவசாயக்...

தங்கள் சுயதேவைக்கு மேலாக பணப் பயிர்களைப் பயிரிட்டுத் தங்கள் வருமானத்தை அதிகரிப்பதற்கான வழிமுறையாக இக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என வடமாகாண விவசாயக் கால்நடை அபிவிருத்தி காணி, நீர்ப்பாசன கடற்தொழில் அமைச்சின் செயலாளர் யு.எல்.எம்.ஹல்தீன் தெரிவித்தார்.

இக் கண்காட்சி யாழ் மண்ணில் உள்ள விவசாயிகளுக்கு ஒரு வரபபிரசாதமாக அமைந்துள்ளது. 20 வருட யுத்தத்தில் காப்பாற்றப்படாத நிலையில் காணப்பட்ட விவசாயிகளுக்கு ஏற்படுத்தப்பட்ட தொழில்நுட்ப முன்னேற்றத்தின் அம்சமாக இக் கண்காட்சி விளங்குகின்றது. தொடர்ந்தும் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை இக் கணகாட்சி நடைபெறும் எனவும் அவர் தெரிவித்தார. (எஸ்)

## மாடு வெட்டியவருக்கு நீதிமன்றம் அபராதம்



அனுமதிப்பத்திரமின்றி மாடு வெட்டிய நபருக்கு ரூபா 7 ஆயிரம் அபராதத்தினை யாழ். நீதிமன்றம் விதித்துள்ளது. மாடு வெட்டிய சந்தேகநபர் கோப்பாய் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு நேற்று யாழ். நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தினர்.


மேற்படி வழக்கினை விசாரணை மேற்கொண்ட யாழ். நீதிமன்ற நீதிபதி ஏ.ஆனந்தராஜா குறித்த நபருக்கு 7 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன், தண்டம் கட்டத்தவறின் ஒரு மாதகால சாதாரண சிறைத்தண்டனையும் அனுபவிக்க வேண்டும் என உத்தரவிட்டார். (எஸ்)

## மின்னல் தாக்கி சிறுவன் பலி

மினுவாங்கொட பொத்துகொட பகுதியில் மின்னல் தாக்கி 13 வயது சிறுவனொருவன் உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் மாலை அவரது வீட்டிலிருந்து மரத்தில் ஏறுவதற்கு முயற்சித்த வேளையில் மின்னல் தாக்கத்திற்கு உள்ளானதாக பொலிஸார் குறிப்பிட்டனர். உயிரிழந்த சிறுவனின் சடலம் மினுவாங்கொட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## யாழ். குடாவை உலுக்கும் டெங்கு பரவலைத் தடுக்கப் பிரச்சாரப் போர்

(யாழ்ப்பாணம்)



கடந்த இரண்டு தினங்களாக டெங்கு தொடர்பான பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகள் குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

அதன் ஒரு அங்கமாக அனைத்துச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் உள்ள 174 கிராமங்களில் ஒலிபெருக்கி மூலமான விழிப்புணர்வுப் பிரச்சாரம் செய்யப்பட்டுள்ளதுடன் 22 இடங்களில விசேட விழிப்புணர்வு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. 12 இடங்களில் சிரமதான நிகழ்வுகள் நடைபெற்றுள்ளது. 68 உழவு இயந்திர சுமை கழிவுகள் அகற்றப்பட்டுள்ளது. 238 வீடுகள், 3 பாடசாலைகள், 28 வர்த்தக நிலையங்கள், 20 அரச, அரச சார்பற்ற அலுவலகங்களும் 16 பொதுச் சந்தை மற்றும் வடிகால்களும், 17 மத வழிபாட்டிடங்களும், 15 பராமரிப்பற்ற காணிகளும் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளால் பரிசோதிக்கப்பட்டது. இவற்றுள் 72 இடங்களில் டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய இடங்கள் கண்டுபிடிககப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.


அதிகளவு டெங்கு தாக்கக் கூடிய அபாய நிலையிலுள்ள 14 இடங்களில் சிவப்பு நிறத்திலான எச்சரிக்கை ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டதுடன் 8 பேருக்கு எதிராக அந்தந்தப் பகுதி நீதிமன்றில் வழக்குத் தொடர்வதற்கான முன்னறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளது.

3 ஆம் திகதி தொற்றுநோய் அறிக்கையின் பிரகாரம் 2 டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர். எவரும் இறக்கவில்லை.

4, 5 ஆம் திகதிகளில் எவரும் டெங்குநோ[illegible] தாக்கத்திற்கு உட்பட்டதாக இனங்காணப்படவில்லை என பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பதிவேடுகள் மூலம் அறியவருகிறது. (கா)

### செய்திப்பூரணம்

**வீதிக்கு வந்தமாடு விண்ணான வேலையாலே**
**மோதியது கருணாவின் மோட்டாரும் - ஏதினி**
**நம்பிக்கை யோடுநாம் நகரதிலும் போய்வருதல்**
**தும்பிக்கை யான்துணை தேடு!**



# முருங்கன் மருத்துவமனை மிகப் பரிதாபமான நிலையில்

(கொழும்பு)

மன்னார் பாலத்திலிருந்து செட்டிகுளம்வரையிலான பிரதேசத்தை உள்ளடக்கியதாக முருங்கன் வைத்தியசாலையின் சேவைகள் இடம்பெறுகின்றன. இங்கு பல குறைபாடுகள் இருப்பதாக தெரியவருகின்றது.

முக்கியமாக ஐந்து வைத்தியர்கள் கடமையாற்ற வேண்டிய இந்த மருத்துவமனையில் ஒரேயொரு மருத்துவரே இரவு பகலாகக் கடமையாற்றுகின்றார்.

அடிக்கடி ஏற்படுகின்ற மின் வெட்டால் சிகிச்சை பெருமளவில பாதிக்கப்படுகின்றது. இதனை நிவர்த்தி செய்ய மின்பிறப்பாக்கி இல்லை. இங்கு 16 நிரந்தரத் தாதியர்களுக்கான ஆளணி காணப்படுகின்ற பொழுதிலும் நான்கு நிரந்தரத் தாதியரும் ஐந்து பயிற்சித் தாதியரும் மாத்திரமே தற்பொழுது கடமையாற்றுகின்றனர். தாதியர்க்கான தங்குமிடவசதி இல்லை.

சுகாதார சிற்றூழியர்களுக்கான தங்குமிட வசதிகள் போதுமானதாக இல்லை, அத்துடன் கால்நடைகள் மருத்துவமனைக்குள் பிரவேசிப்பதால் பல்வேறு நோயாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் அசௌகரியங்கள் எதிர்நோக்குகின்றனர்.

இவ்வாறான பல குறைபாடுகளுடன் காணப்படும் மன்னார் முருங்கன் வைத்தியசாலையை முழுமையாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

# இந்திய துணைத் தூதரக ஏற்பாட்டில் செயற்கை அவயவ சிகிச்சை முகாம்

(யாழ்ப்பாணம்)

செயற்கை அவயவங்களை பொருத்தும் முகாம் தற்போது கோண்டாவில் பிரதேச வைத்தியசாலையில் நடைபெற்று வருகின்றது. நிகழ்வினை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, இந்தியத் துணைத்தூதுவர் மகாலிங்கம் ஆகியோர் நேற்று நாடா வெட்டி ஆரம்பித்து வைத்தனர்.



யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் வடமாகாண சுகாதார அமைச்சின் ஒருங்கிணைப்புடன் இந்திய ஜெய்ப்பூர் நிறுவனம் இம்முகாமினை நடத்தி வருகின்றது. இது எதிர்வரும் 28 ஆம் திகதிவரை தொடர்ந்து நடைபெறும்.

வடமாகாணத்தைச் சேர்ந்த செயற்கை அவயவங்கள் பொருத்தப்படவேண்டியவர்கள் இம் முகாமில் சேவையைப் பெற்றுக் கொள்ளலாம்.

இச்சேவை முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

கை, கால் போன்ற உறுப்புக்களை இழந்தவர்களுக்கு செயற்கை கை, செயற்கை கால் பொருத்தப்படுகின்றது.

ஏற்கனவே செயற்கை அவயவங்களை உடையவர்களும் இங்கு மேலும் ஒரு புதிய செயற்கை அவயவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஏற்கனவே செயற்கை அவயவங்கள் உடையவர்கள் தேவையான திருத்தங்களையும் இங்கு மேற்கொள்ளலாம்.

நோயாளர்களுக்கு காலையில் அளவுகள் எடுக்கப்பட்டு பிற்பகலில் ஒரே நாளிலேயே செயற்கை அவயவம் செய்து வழங்கப்படும்.

நோயாளர்கள் இதற்கு எங்கும் தம்மைப் பதிவுசெய்து கொள்ளத் தேவையில்லை. நேரடியாக கோண்டாவில் பிரதேச வைத்தியசாலைக்கு வந்து இச்சேவையைப் பெறலாம்.

நோயாளர்களுக்கு மதிய உணவு, சிற்றுண்டிகள் யாவும் இலவசமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே சிகிச்சை தேவையானோர் இதில் இணைந்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# சிறுவர் துஷ்பிரயோகம் நடந்தால் எந்த வேளையிலும் முறையிட வசதி



(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்படுவோர் 24 மணித்தியாலமும் உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வசதியாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் நாள் முழுவதும் இயங்கும் வகையிலான புதிய தொடர்பு நிலையமொன்றை ஸ்தாபித்துள்ளது.

சிறுவர் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்படுவோர் 0112 713039 எனும் தெலைபேசி இலக்கத்தின் மூலம் எவ்வேளையிலும் உதவிகளை பெற்றுக்கொள்ளலாம். செப்ரெம்பர் முதலாம் திகதி இச்சேவை ஆரம்பிக்க்ப்பட்டுள்ளது.

புதிய செயற்திட்டத்தின்படி, சிறுவர் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்படுவோர், குற்றமிழைப்போர் தொடர்பான விபரங்களை அலுவலக நேரத்தின் பின்னரும் கூட இத்திணைக்களத்திற்கு வழங்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட சிறார்கள் இரவு நேரத்தில் தொடர்பு கொண்டால் அப்பிள்ளை தற்காலிகமாக சிறுவர் பாதுகாப்பு நிலையத்தில் தங்க வைக்கப் படும் என அவர் கூறினார்.

பாதிக்கப்பட்ட சிறார்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுவதற்கு முன் இச்செயன்முறையின் மூலம அவர்களுக்கு பராமரிப்பும் பாதுகாப்பும் வழங்கப்படும்.

# வடக்கில் 180 கோயில்களை திருத்த அரசுநிதி உதவி

**- கம்பளையில் பிரதமர் -**



(கொழும்பு)

வட மாகாணத்தில் யுத்தத்தின் போது பாதிப்படைந்த 180 கோயில்களை புனரமைப்புச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதமர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்தார். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் 65 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று கம்பளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் பிரதமர் டி.எம்.ஜயரட்ன விசேட வழிபாடுகளில் கலந்துகொண்டார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், மதங்கள் யாவும் மனிதனுக்கு வழிகாட்டுகின்றன. மத ஸ்தாபனங்கள் சிவில் சமூகத்தில் தனி மனிதர்களை மட்டுமன்றி நிறுவனங்களையம் கட்சிகளையும் நெறிப்படுத்த முடியும். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அரசாங்கம் தமிழ் மக்களுக்கு பல சேவைகளை முன்னெடுத்த கட்சியாகும் என்றார்.

# மயான வீதியில் பாலம் புனரமைப்பு எப்போது?

கிளிநொச்சி மாவட்ட கரைச்சிப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட உருத்திரபுரக் கிராமத்தில் அமைந்துள்ள இந்துமயான வீதிக்கு நீண்டகாலமாக பாலம் நிர்மாணிக்கப்படாமையால் அப்பிரதேச வாழ்மக்கள் மயானத்தைப் பயன்படுத்த மாற்றுப் பாதையை நாடுவதாக குறை கூறுகின்றனர்.

4 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பாவிக்கும் இம் மயானத்திற்கு பிரதான பாதையாக மேற்படி பாதை அமைந்துள்ளது. எனினும், இந்தப் பாதையை ஊடறுத்து வாய்க்கால் ஒன்று செல்வதனால் இதில் பொது மக்கள் பயணிக்க முடியாதுள்ளது. இப்பாதையின் மேல் பாலம் அமைக்கப்படும் பட்சத்தில் மயானத்தை மக்கள் குறைந்த நேரத்தில் சென்றடையக் கூடியதாக இருக்கும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இப்பிரதேசம், யுத்தம் நிறைவடைந்ததும் மேற்படி பாலவேலை ஆரம்பிக்கப்படவில்லை. 2007 ஆண்டு காலப் பகுதியில் இப்பால நிர்மாணிப்புக்காக கொ[illegible]டு வரப்பட்ட உலோகக் கேடர்கள் துருப்பிடித்த வண்ணம் இருக்கின்றன.

எனவே, அண்மையில் கரைச்சி பிரதேச சபையில் பதவியேற்ற உறுப்பினர்கள் இவ்விடயத்தில் தலையிட்டு பாலம் நிர்மாணிக்க உதவுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (எப்.எஸ்)

# திருச்சி மாதர் சங்கம் வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கையில் யுத்தத்தினால் விதவையாகி உள்ள ஒரு இலட்சத்து 20 ஆயிரம் பெண்களுக்கும், ஊனமுற்ற 30 ஆயிரம் பெண்களுக்குமான வாழ்வாதாரத்தை உறுதி செய்திடும் வகையில் பொருளாதாரத் திட்டங்களை இலங்கை அரசு செயல்படுத்திட இந்திய மத்திய அரசு முயற்சி எடுக்க வேண்டும் என நேற்று முன்தினம் திருச்சியில் நடந்த இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் திருச்சி மாவட்ட மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

# தயா மாஸ்டர் மீதான வழக்கு சட்டமா அதிபரிடம் ஆலோசனை



(கொழும்பு)

புலிகளின் ஊடகப் பேச்சாளராக கடமையாற்றிய தயா மாஸ்டர் மற்றும் மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றிய ஜேர்ஜ் மாஸ்டர் ஆகியோருக்கு எதிராக தொடுக்கப்பட்டிருந்த வழக்கு நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றில் மீண்டும் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, இவர்கள் தொடர்பாக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தொடர்பில் சட்டமாஅதிபரின் ஆலோசனையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வோண்டும் என குற்ற விசாரணை பிரிவினர் நீதிமன்றில் கோரிக்கை விடுத்தனர்.

2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி இவர்கள் இருவரும் ஓமந்தை பொலிஸாரிடம் சரணடைந்தனர். பின்னர் மேலதிக விசாரணைக்காக குற்ற விசாரணை பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இந்தநிலையில், நேற்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, கொழும்பு பிரதான நீதவான் ரஸ்மி சிங்கப்புலி இந்த வழக்கை எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

# பொன்சேகாவுக்கு மருத்துவ சோதனை

(கொழும்பு)

இரண்டு வாரகால உடற்கூற்று மருத்துவப் பரிசோதனைக்காக முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவை வைத்திய ஆலோசகர் வஜிர தென்னக்கோனிடம் காட்டுமாறு சிறைச்சாலை அத்தியட்சகரிடம், மேல் நீதிமன்ற ட்ரையல் அற்பார் நீதிபதிகள் நேற்று உத்தரவிட்டது.

சரத் பொன்சேகாவிற்கு இரண்டு வாரகால உடற்கூற்று மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதாகவும் இதனால் அவருக்கு சிகிச்சையளிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் வைத்தியர் வஜிர தென்னக்கோன், சிறைச்சாலை அத்தியட்சகரிடம் கோரிக்கை விடுத்ததாக நீதிமன்றத்திற்கு சிறைச்சாலை அத்தியட்சகர் அறிவித்துள்ளார்.

# காணியற்ற குடும்பங்கள் கரைச்சிப் பிரதேசத்தில் தாராளம்

**இவர்களுக்கு எப்போது விடிவு**

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசத்தில் சுமார் 12 ஆயிரம் பேர் வரையில் காணிகள் இன்றி இருப்பதாகப் பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் காணிகள் இல்லாதவர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகின்றது.

இந்த மாவட்டத்தில் கண்டாவளை, பூநகரி, கரைச்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலகங்கள் உள்ளன. கரைச்சிப் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டபோது சுமார் 12 ஆயிரம் பேர் சொந்தக் காணிகள் இன்றிக் காணிகளுக்கு விண்ணப்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 34ஆயிரம் பேர் சொந்தக் காணிகளில் உள்ளதுடன், மலையகத் தோட்டப் பகுதிகளில் இருந்து பல்வேறு தேவைகளுக்காக மீளக்குடியமர்ந்தவர்களும் சொந்தக் காணிகள் இன்றி கடந்த பல ஆண்டுகளாக ஏனைய விவசாயிகளின் காணிகளிலும், அரச காணிகளிலும் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறு சொந்தக் காணிகள் இல்லாத நிலையில் இவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் கிடைப்பதிலும் பின்னடைவுகள் காணப்படுவதாகக் கரைச்சிப் பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 செப்ரெம்பர் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.